SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:3, Issue:6, Pages:56
JANUARY-2024, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜனவரி 2024,
விலை ரூ.20/-



விநா வேங்கடேசம் ந நாதோ ந நாத: ஸதா வேங்கடேசம் ஸ்மராமி ஸ்மராமி ।
ஹரே வேங்கடேச ப்ரஸீத ப்ரஸீத ப்ரியம் வேங்கடேச ப்ரயச்ச ப்ரயச்ச ॥

10-11-2023 முதல் 18-11-2023 வரை திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு
நடைபெற்ற கார்த்திகை பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள்.
பிரம்மோத்ஸவத்தில் பங்குகொண்ட ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய, சின்ன
ஜீயர் ஸ்வாமிகள், தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத் தலைவர்
திரு.பூமண கருணாகர ரெட்டி அவர்கள், தி.தி.தே. செயலாட்சித் தலைவர்
திரு. ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள்























*ந ஹி ப்ரபச்யாமி மமாபநுத்$_3$யாத்$_3$-*
*யச்சே$_2$ாகமுச்சே$_2$ாஷணமிந்த்$_3$ ரியாணாம் ।*
*அவாப்ய பூ$_4$ மாவஸபத்நம்ருத்$_3$த$_4$ ம்*
*ராஜ்யம் ஸுராணாமபி சாதி$_4$ பத்யம்॥*




ஏனெனில், பூவுலகில் எதிரிகளற்ற தன–
தானியங்கள் நிறைந்த ராஜ்யத்தையும்,
தேவர்களுக்கு அதிபதியாக இருப்பதையும்
அடைந்தாலும் கூட, எது என்னுடைய
புலன்களை வாட வைக்கின்ற சோகத்தைப்
போக்கடிக்குமோ, அதை நான் காணவில்லை.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–8*

*புரிந்து மலரிட்டுப் புண்டரீகப்பாதம்*
*பரிந்துபடுகாடுநிற்ப - தெரிந்தெங்கும்*
*தானோங்கி நிற்கின்றான் தண்ணருவி வேங்கடமே*
*வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு.*

திருவடித் தாமரைகளில் அன்பு பூண்டு, புஷ்பங்களைப் பணிமாறி, மங்களாசாசனம் பண்ணி, வெட்டி வீழ்த்தின மரங்கள் போலே கால் பேராமல் நிற்கும்படியாக, ஸகல ப்ரதேசங்களிலும் விளங்கி, குணங்களால் பெருமை பெற்று எழுந்தருளியிருக்குமெம்பெருமானுடையதாய், குளிர்ந்த அருவிகளையுடைத்தான திருமலையே நித்யஸுரிகளுக்கும், நிலத்தேவரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் நிதியாயிருக்கும்.

*-நான்முகன் திருவந்தாதி 45*



# அருளை அருளும் அயோத்தி

அயோத்தி மாநகரம், மற்ற நகரங்களைப்போல புவியில் அமைந்துள்ள ஒரு சாதாரணமான இடமல்ல. இது அந்த இறைவனே நடமாடிய இடமாகும். இலக்ஷகணக்கானவர்களை ஒருமுறையேனும் அம்மண்ணை தொட வேண்டும் என ஏங்க வைத்த இடமாகும். ஆதிகவி வால்மீகியின் இராமாயணம் அயோத்தியை அடிப்படையாகக் கொண்டது. இராமாயணத்தின் பால காண்டத்தின் ஐந்தாவது, ஆறாவது சர்க்கங்கள் முழுவதும் அயோத்தியைக் குறிப்பிடுகின்றன. இவற்றில் பல அம்சங்களும் சிறப்புகளும் கூறப்பட்டுள்ளன. கோசல தேசத்தில் உள்ள அயோத்தி மனுவால் கட்டப்பட்டது. இது உலகப் புகழ் பெற்று விளங்குகிறது என்று பால காண்டத்தில் அயோத்தியைப் பற்றி வர்ணிக்கப்படுகிறது.

சரயு நதி கிழக்குக்கரையில் அமைந்துள்ள ஒரு அழகான ஆன்மீகத்துடன் தொடர்புடைய நகரமே அயோத்தி மாநகரமாகும். அயோத்தி என்றவுடனே நினைவுக்கு வருவது ராம ஜென்ம பூமி என்ற வரிகளே! இஷ்வாகு, ப்ருது, மன்தான்தா, அரிச்சந்திரா, சாஹார், பகீரத், ரகு, தீலிப், தசரதன் மற்றும் ஶ்ரீராமர் ஆண்ட புண்ணிய பூமி கோசலை தேசமாகும். ராம ராஜ்ஜியத்தில் அந்த புகழ் மேலும் பன்மடங்காகப் பெருகியது. இராமாயணம் என்ற இதிகாசத்தினால் இந்த புண்ணிய பூமி சரித்திரத்தில் நிலைத்து நின்றது என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை.


ஶ்ரீராமர் பிறந்த புண்ணிய பூமியான அவத்புரி என்ற இந்த அயோத்தியானது ஏழு முக்கியமான யாத்திரை தலங்களான மோட்ச தலங்களில் முதன்மையானது.

அயோத்தி 12 யோஜனை தூரம் நீளமும், மூன்று யோஜனை தூரம் அகலமும் கொண்டதாகும் என்கிறார் வால்மீகி. அதாவது இன்றைய கணக்கின்படி 168 கி.மீ. நீளத்திற்கும், 42.5 கி.மீ. அகலத்திற்கும் நிகரானது.இதன்படி அயோத்தி நகரம் பரப்பளவு அன்று 7056 ச.கி.மீ.ஆகும். இந்த ராம மந்திரம் மொத்தம் 2.7 ஏக்கர் நிலத்தில் 57,400 சதுர அடி நிலத்தில் கட்டப் பட்டுள்ளது. இதன் ஆலயத்தின் நீளம் 360 அடியாகவும், அகலம் 235 அடியாகவும் அமைந்துள்ளது. 161 அடி உயரத்தில் அமைந்த இந்த ஆலயம் மூன்று தளங்களாக அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தளமும் 20 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.



முதல் தளத்தில் 160 தூண்களுடனும், இரண்டாவது தளத்தில் 132 தூண்களுடனும், மூன்றாவது தளத்தில் 74 தூண்களுடனும் அமைந்துள்ள இந்த ஆலயத்திற்கு 12 நுழைவுவாயில்கள் உள்ளன.

உத்திர பிரதேசத்தில், லக்னோ விமான நிலையத்திலிருந்தும், பண்டிட் தீனதயாள் இரயில் நிலையத்திலிருந்தும் இந்த இடத்தை சென்று அடையலாம்.



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்



# ஸப்தகிரி

## சமய மாத இதழ்


ஜனவரி 2024

மலர் 03 இதழ் 06


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| தெலுங்கு மக்களின் பெரும் பண்டிகை (சங்க்ராந்தி) -திரு. பூமண கருணாகர ரெட்டி, திருப்பதி. | 07 |
| திவ்ய திருப்பாவை -திரு. நம்பி எஸ்.தேவர், நவிமும்பை. | 09 |
| சஞ்சீவிராயர் நின்று அருளும் அய்யங்கார் குளம் -திரு. தி.சக்திவிநாயகம், அய்யங்கார்குளம். | 11 |
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம்: திருமழிசையாழ்வார் கண்ட திருவேங்கடம் -பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 13 |
| பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் -திரு. எம்.எஸ். சுகுமார், சென்னை. | 16 |
| ஆநிரைகளின் ஆயர்பாடி நிலமது முல்லை - முனைவர். ந.மைதிலி, சென்னை. | 18 |
| புலன்களைக் காவலில் வை -திரு. எஸ்.சுதர்சனம், நங்கைநல்லூர். | 20 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: இக்ஷ்வாகு குல குரு வசிஷ்டர் - திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 23 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: காவிரிக்கரையில் கல் நாதஸ்வரம் - படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 25 |
| நீங்காத செல்வம் நிறைந்த பொங்கல் -திருமதி. ராஜலக்ஷ்மி, கேரளா. | 31 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 34 |
| 108 திவ்யதேச வைபவம் : நிலாத்திங்கள் துண்டத்தான் (பெரிய காஞ்சிபுரம்) - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 37 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : திருக்கச்சி நம்பிகள் - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 40 |
| திவ்ய ப்ரபந்தத்தின் ரஹஸ்ய வ்யாக்யானங்கள் - ஸ்ரீ உ.வே. அரையர் ஸ்ரீராமசர்மா ஸ்வாமி, மேலுக்கோட்டை. | 42 |
| ஏகாதசி விரதம் புராண வரலாறுகளுடன்... - திரு.கிருஷ்ண துளசி, சென்னை. | 44 |
| ராசிபலன்கள் : ஜனவரி 2024 -டாக்டர் எம்.வி. நரநாராயணன்,சேலம். | 46 |
| நீதிக்கதை : ம(ா)க்கள் சேவையே மாதவன் சேவை -திருமதி எஸ்.வைஷ்ணவி, திருப்பதி. | 47 |
| சித்திரக்கதை : பொங்கல் பண்டிகை மரபு | 52 |


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : உபய தேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.

பின்னட்டை : கோதை அலங்காரத்தில் கோவிந்தன், திருமலை.


சிறப்பு ஆசிரியர் :
திரு. A.V. தர்மா ரெட்டி, ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org


| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்

உங்களுடன்...

# மனம் பொங்கும் பொங்கல்!



சூரிய பகவானே அனைத்து தேவதைகளின் வடிவமாகத் திகழ்கிறார். அனைவருக்கும் கண்கண்ட தெய்வமும் அவரே ஆவார். அசையும் பொருட்கள் அனைத்திற்கும் சூரியனே உயிராகவும் விளங்கி, பல நோய்களை குணப் படுத்துவதாகவும் வேதங்கள் கூறுகின்றன. சூரிய பகவான் தனுசு ராசியிலிருந்து மகர இராசிக்குப் பிரவேசிக்கும் நாளே சங்கராந்தியாகும். அதாவது சூரியன் தென்திசையில் இருந்து வடதிசை நோக்கி பயணிக்கும் நாளாகும். இந்நாளைத்தான் உத்தராயண புண்ணிய காலம் என்பர். இது போது தான் சூரியனும் வடதிசையில் உள்ள ஊர்த்துவ லோகத்தில் வசிப்போருக்கு அக்ஞானத்தை போக்கி ஞானத்தை அளிக்கின்றார். உத்தராயண காலம் மிகவும் புனிதமானது என்று கூறுவர். ஆதலால்தான் பீஷ்மரும் போர்க்களத்தில் உயிர்த் துறக்க இருந்த போதும் மார்கழியிலிருந்து உத்தராயண புண்ணிய காலம் வரும் வரை உயிர்த் துறக்காமல் இருந்ததாக மகாபாரதம் கூறுகின்றது. இந்த உத்தராயண காலத்துவக்கத்தில்தான் சூரியனை துதிக்கும் வகையில் சூரியனுக்கு பொங்கலிட்டு வழிபடுகின்றோம். இது தமிழர் பண்பாடாகும்

சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும் *“ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!! காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு மேருவலம் திரிதலான்”* என்று சூரிய வழிப்பாட்டை குறிப்பிடுகின்றார். இதன் மூலம் சங்ககாலம் தொட்டே தமிழர் பண்பாட்டில் சூரிய வழிபாடு இருந்திருப்பதனை நாம் அறிய முடிகிறது. இந்த உலகம் இயங்குவதற்கு மூல காரணமாக விளங்குபவரான சூரிய பகவானை வழிபட்டு, சூரிய ஆற்றலால் விளைந்த பயிர்களை அறுவடை செய்து, சூரியனுக்கே படைக்கும் திருவிழாதான் பொங்கல் பண்டிகை ஆகும். இதனை அறுவடைத் திருநாள் என்றும் அழகாகக் கூறுவர்.

குடும்பத்தார் அனைவரும் ஒன்று கூடி அகமும் புறமும் மலர்ந்து, மங்கல ஒலி ஒலிக்கும் நன்னாள் தான் பொங்கல் திருநாளாகும். பொங்கல் பானையில் இருந்து பொங்கல் பொங்குவதுபோல் நம் வாழ்வில் வளமும், நலமும் பொங்கி மகிழ்ச்சியினை அளித்திடும் நன்னாளாக பொங்கல் பண்டிகையைக் கொண்டாடி மகிழ்கிறோம். இப்பண்டிகையினை மகர சங்கராந்தி, தைத்திருநாள், தமிழர் திருநாள், பெரும் பொங்கல், உழவர் திருநாள் எனப் பல பெயர்களில் அழைப்பர்.

பண்டிகை என்றாலே ஓரிரு நாட்கள்தான் கொண்டாடுவோம். ஆனால், இப்பொங்கல் பண்டிகையைத்தான் நான்கு நாட்கள் வரை கொண்டாடி மகிழ்கின்றோம். தை மாதத்தின் முதல் நாளுக்கு முந்தைய நாள் அதாவது மார்கழி மாதத்தின் இறுதி நாளில் பழையனவற்றைக் கழித்து, புதியனவற்றைப் புகுத்தி போகி பண்டிகையாகவும், இரண்டாம் நாள் பெரும் பொங்கலாகவும், மூன்றாம் நாள் ஆநிரைகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் மாட்டுப்பொங்கலாகவும், நான்காம் நாள் காணும் பொங்கல் அல்லது கன்னிப் பொங்கல் எனக் கொண்டாடு கிறோம். குறிப்பாக, உழவர்கள் தங்கள் உழவிற்கு உதவிய இயற்கைகளான பஞ்ச பூதங்களுக்கும், ஆநிரைகளுக்கும் நன்றி செலுத்தும் விழாவே இத்தைத்திருநாள் எனும் பொங்கல் விழாவாகும்.

எது எப்படியாக இருந்தாலும் தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். மணமாகாத பெண்களுக்கு மணம் கை கூடுவதையும், புதிய தெளிவுகள் பிறந்து வாழ்க்கை வளம் பெறுவதையும் நாம் கண்கூடாக காண்கிறோம். எல்லோருடைய இல்லத்திலும், அனைவரின் உள்ளத்திலும் மகிழ்ச்சி பொங்கத்தான் செய்கிறது.

இல்லந்தோறும் இனிமை பொங்கிடவும், நன்மை பெறுகிடவும், மகிழ்ச்சி உலாவவும், மங்கலம் செழித்தி டவும் “பொங்கலோ பொங்கல்” எனக் கூறி தை மகளை வரவேற்றிடுவோம். உலகெங்கிலும் ஆன்மீக அன்பு தழைத்து, மக்கள் மனதில் மகிழ்ச்சி பொங்கி, அமைதி பெறுகிட இறைவனை மனங்குளிர வணங்குவோம்.





# தெலுங்கு மக்களின் பெரும் பண்டிகை (சங்க்ராந்தி)

**தெலுங்கு மூலம் :**
**திரு. பூமண கருணாகர ரெட்டி,**
தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர், திருப்பதி.

பெரிய வாயில் என்பது கோபுரத்தின் முதன்மையான நுழைவு வாயிலாகும். அதேபோன்று தெலுங்கு மக்களின் பெரிய பண்டிகை என்றாலே அது சங்க்ராந்தி. அதாவது பொங்கல் திரு நாளாகும். சங்க்ராந்தியை பொம்மைத் திருவிழா, கோலங்களின் திருவிழா, அறுவடைத் திருநாள், கால்நடை திருவிழா, முன்னோர்களின் திருவிழா என்றும் கூறுவர். சங்க்ராந்தி வருகின்ற புண்ணிய காலத்தில் சூரியன் மகர ராசியில் நுழைகின்றார். தேவர் களின் அதிகாலைப் பொழுதாகத் துவங்கும் இந்த உத்தராயண புண்ணிய காலத்தில்தான் புனித நீராடுதல், தானம், தவம், பித்ருக்கடன் (தர்ப்பணம்) போன்றவற்றை செய்தல் வேண்டும். இயற்கையாகவே இம்மாதத்தில்தான் வீட்டிலும் விளைச்சள் பொருட்கள் குவிந்து இருக்கும். மகாலட்சுமியின் வடிவமான பசுக்களை சிறப்பாக வழிபடும் காலமும் இதுவே ஆகும். விளைச்சளை பார்த்தவுடன் இதுவரை தாம் பட்ட இன்னல்களை எல்லாம் உழவர்களும் மறப்பர். இப்பூமியினை படைத்த இறைவனுக்கும் நிலத்தை உழ உதவும் காளைகளுக்கும் நன்றியைக் காணிக்கையாகச் செலுத்துவதே இம்மாட்டுப் பொங்கல் ஆகும்.



பண்டைய காலங்களில் கிராமப்புறங்களில் புதியதாக அறுவடை செய்யப்பட்ட தானியங்களைக் கொண்டு பொங்கல் இடுவர். வண்ண வண்ணக் கோலங்களால் வீட்டின் முற்றத்தை அலங்கரிப்பர். நம் வீட்டு பெண்பிள்ளைகள் பொங்கல் அன்று பிறந்த வீட்டிற்கு வருவதும் மரபாகும். பெண்கள் மஞ்சளை முகத்தில் பூசிக் கொண்டும், நெற்றியில் திலகத்தினை இட்டுக் கொண்டும், அழகான புடவைகளை அணிந்து கொண்டும் மகா லட்சுமியைப் போன்று காட்சி அளிப்பர்.

வீட்டின் முற்றத்தில் அலங்கரிக்கப்பட்ட வண்ணக் கோலங்களுக்கு இடையே பெண் பிள்ளைகள் பசும் மாட்டுச் சாண உருண்டை (தெலுங்கில் கொப்பெம்மா என்பர்) வைத்து, பூசணிப் பூக்களால் அலங்கரிப்பர். பின்னர் அதனைச் சுற்றி வந்தபடி கும்மியடித்து பாடல் களைப் பாடுவர். இது பூமித் தாயை வணங்குவதாகும். அதேபோன்று ஆண் பிள்ளைகளும் காற்றில் பட்டங்களை பறக்க விடுவர்.

அதிகாலையில் பனித்துளிகளுக்கிடையில் பழையன வற்றை கழித்து, புதியனவற்றை வரவேற்கும் வகையில்



போகித் தீயில் பழைய ஆடைகள், விளக்குமாறு, பழைய முறம் போன்றவற்றை தீயிலிடுவர். இது பீடையையும் அரிஷ்டத்தையும் போக்கும். மன அழுக்குகளை தொலைக்க வேண்டும் என்பதே இதன் உட்பொருளாகும்.

மாலை வேளையில் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இலந்தைப்பழம் தலை மேல் பொழிவர். இதில் இலந்தைப்பழம், பொறி, உடைத்த கடலை, சில்லறைகள் கலந்து குழந்தைகளுக்கு திருஷ்டி எடுத்து, பின்னர் அவர்கள் தலைமேல் பிரம்மாந்திரம் முதல் கீழே விழும்படி பொழிவர். இதனால் குழந்தைகளுக்கு புத்திபலம், பண்பாடு ஏற்படுவதோடு பாலரிஷ்டதோஷமும் நீங்கும்.

மாட்டுப்பொங்கல் அன்று விவசாயத்தில் நம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கு மஞ்சள் கும்குமமிட்டு அவற்றிற்கு நன்றி செலுத்தும் விதமாக கொண்டாடுவது வழக்கம். இது நந்தியை யும், காமதேனுவையும் வணங்குவதற்கு சமமானது.

நம் பாரததேசம் விவசாயத்தையே முதுகெலும்பாக கொண்டுள்ளது. பொங்கலன்று புதிய அரிசி, புதிய வெல்லம் போன்றவற்றால் நிவேதனம் செய்து இறைவனுக்கு படைத்து இயற்கை அன்னையை வணங்குவது வழக்கம்.

சங்க்ராந்தியன்று செய்யும் தானங்கள் கூஷ்மாண்ட (வெள்ளைப்பூசணி) தானம், காரேலு (உளுந்து வடை) நிவேதனம் செய்வதால் பித்ரு தேவதைகள் மகிழ்ச்சி கொள்வதாக நம்பிக்கை. ஹரி தாசர்கள் இம்மாதம் முழுவதும் ஹரி நாம சங்கீர்த்தனைகளைப் பாடிக் கொண்டு வலம் வருவர்.

மேலும், குடுகுடுப்பை ஆட்டிக் கொண்டு சுபவார்த்தைகளைக் கூறிக்கொண்டு குடுகுடுப்புக் காரர்கள் வருவர். விதவிதமான ஆடைகளையும், மணிகளையும் காளை மாட்டிற்கு அலங்காரம் செய்து பூம்பூம்மாட்டுக்காரரும் வீதியில் வலம் வருவர். ஜங்கம் தேவரர்கள் பரமசிவனை போன்று தலையில் கிரீடம், நெற்றி முழுவதும் விபூதி பட்டைகளை தரித்தும், கழுத்தில் பெரிய சங்கு அணிந்து கொண்டும் "சம்போ மஹாதேவா, சிவசங்கரா" என்று கூறிக்கொண்டு கையில் பெரிய மணியை அடித்தபடி வருவர். வேடிக்கை வித்தை காரர்கள் விநோதமாக வித்தைகளை செய்வர்.

கொம்மதாசர்கள் ஊரின் நடுவில் உள்ள உயரமான மரத்தின் கீழ் பிக்ஷைக்காக அமர்ந்து புதிய துணியை விரிப்பர். பகல் வேஷக்காரர்கள் விதவித மாக வேடங்கள் அணிந்து பிக்ஷைக்காக வருவதும் உண்டு. தத்துவங்களை சொல்லிக் கொண்டு பைராகி போன்றவர்கள் இந்த பண்டிகையின் போது தரிசனம் அளிப்பர்.

இன்றைய நவீன காலம் இயந்திரமயமாக மாறியுள்ளது. செல்போன்கள், லேப்டாப் போன் றவைகளால் நம் பாரம்பரிய பண்டிகை கொண்டாட் டங்களும் குறைந்து, பண்டிகை கால வேடிக்கை களில் இருந்து சற்று விலகி வருகின்றனர்.

இந்த இயந்திர உலகத்திலிருந்து நாம் வெளியே வந்து இயற்கை அன்னையோடு சேர்ந்து நம் பண் டைய கலாச்சாரத்தை அனுசரித்து, நம் பண்டிகை களை கொண்டாட வேண்டும். அன்றைய நினைவு களும், கொண்டாட்டங்களும் மீண்டும் நம் வாழ்க்கை யில் மலர வேண்டும் என கலியுக கண்கண்ட தெய்வமான வேங்கடவனை பிரார்த்தனை செய்து, இப்பொங்கல் நந்நாளில் எல்லோரும் இன்புற்று இருக்க வாழ்த்துகிறேன்.

**தமிழாக்கம் : திரு. வ. ஓ. சுரேஷ், சத்திரவாடா.**

# திவ்ய திருப்பாவை

– திரு.நம்பி எஸ்.தேவர், நவிமும்பை,
9967472373

காலம் கடந்து நிற்கும் நமது சனாதன தர்மத்தில் இல்லாதது, சொல்லாதது எதுவும் இல்லை. இங்கே பக்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பகவான் பக்தவத்ஸலன்; பாகவதப் பிரியன்; தான் படைத்த எல்லோரும் தன்னை வந்து அடைய வேண்டும் என்று எண்ணுபவன்; அதற்காக பல பிறவிகளை எடுத்தான்; அதில் தான் நினைத்த பலனை எட்டவில்லை என்று உணர்ந்தான்; பரமனடி சேர்வதுதான் ஓர் பக்தனின் எண்ணமாகவும் இருத்தல் வேண்டும்.

ஆகவே, இம்மார்க்கத்தை மேம்படுத்த எண்ணினான்; பல நித்ய சூரிகளை, ஜீவன் முக்தர்களை பக்தர்களாகப் படைத்துப் பாரில் பரவ விட்டான்; அவ்வாறு படைக்கப்பட்டவர்களால் பாடப்பட்டது தான் நாலாயிரத்திவ்யப் பிரபந்தம். இதில் ஆண்டாள் பாடிய திருப்பாவை மிகவும் பிரசித்தி பெற்றது. திவ்யமானது. அப்பாசுரங்களில் காணும் சில திவ்யமான எண்ணங்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம். ஆண்டாளுக்கு கோதை என்ற பெயரும் உண்டு. அவர் பாடிய பாசுரங்கள் வேதமனைத்திற்கும் வித்தாகும் என்று கூறப்படுகிறது. இதை பகவான் கிருஷ்ணன் கீதையில் நான்தான் இந்த உலகத்தின் விதை என்று கூறியுள்ளான். பகவானின் வாக்குக்கு மறுவாக்கு கிடையாது. எனவே ஆண்டாளின் பாசுரங்கள் பல சாஸ்திர விதிகளைத் தன்னகத்தே கொண்டது.



முதல் பாசுரத்தில், **''கூர்வேல் கொடுந்தொழிலன் நந்த கோபன்''** என்று ஆண்டாள் கூறியுள்ளாள். வேலுக்கு உரியவன் வேலவன் தான் என்பது நாம் கண்ட உண்மை. இங்கே நந்த கோபன் வேல் வைத்திருப்பதாகப் பாடியுள்ளாள். நந்தகோபன் ஆயிரக்கணக்கான மாடுகளுக்குச் சொந்தக்காரன். அவைகளைக் காக்கும் பொருட்டுத் தன் கையில் வேல் வைத்துள்ளான் என்பது விளக்கம்.

மற்றொரு பாசுரத்தில் *''மாதம் மும்மாரி பெய்து''* என்கிறாள். மாரி என்றால் மழை. ஒரே மாதத்தில் மூன்று மழைகள் பெய்யும் என்று கூறுகிறாள். இதன் விளக்கம் சாஸ்திரத்தில் இருக்கிறது. அதாவது வேதத்தை நன்றாக கற்றுத் தேர்ந்து அதை தன் வாழ்க்கையில் கடைபிடித்து, பின் வந்தவர்களுக்குக் கற்று கொடுக்கும் பிராமணனுக்கு ஒரு மழை, அடுத்து நீதி தவறாத நேர்மையான அரசனுக்கு ஒரு மழை, கடைசியாக கற்பில் சிறந்த பத்தினிக்கு ஒரு மழை என மாதம் மூன்று முறை மழை பெய்யுமாம்.

அடுத்த பாசுரத்தில், பாவை நோன்புக்கு கடைபிடிக்க வேண்டிய பல வழிமுறைகளைக் கூறியுள்ளாள். காலையில் எழுந்து நீராடி

விட்டுத் தலையில் பூச்சூட மாட்டோம். கண்ணில் மையிட மாட்டோம். செய்யக் கூடாத செயல்களைச் செய்ய மாட்டோம் என்கிறாள். ஆயர் பாடியில் பசுக்கள், குடம் குடமாக பால் கொடுக்கிறது. அப் பசுக்களை ஆண்டாள் வள்ளல் பெரும் பசுக்கள் என்று பாடுகிறாள். இப்பசுக்கள் கொடுத்த பாலைத் தயிராக்கித் தயிர் கடையும்போது கழுத்தில் அணிந்திருந்த பெரிய காசும், அதன் பக்கத்தில் உள்ள சிறிய காசும் சத்தத்தை உண்டுபண்ணும்.

இந்தச் சத்தம் உன் காதில் விழவில்லையா? இதை **''காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து வாச நறுங்குழலாச்சியர் மத்தினால் ஓசை படுத்த தயிர் அரவம் கேட்டிலையோ?''** என்று அழகுபடப் பாடியுள்ளாள். இங்கே பத்தினிப் பெண்களுக்கு இயற்கையில் தலைமுடியில் மணம் உண்டா என் பதை கண்டறிய, பாண்டிய மன்னன் அரச சபையில் கவிஞனாக வந்த சிவபெருமானும் நக்கீரனும் வாதிட்ட கதை மனதில் எழுகிறது. ஆண்டாள் **''வாச நறுங்குழல் ஆய்ச்சியர்''** என்று கூறியுள்ளாள்.

மற்றுமோர் பாசுரத்தில் **''எருமை கன்றுக்கு இரங்கி நினைத்து முலை வழியே நின்று பால் சோற நனைத்து இல்லம் சேறு ஆக்கும்''** என்று பாடியுள்ளாள். காலை நேரத்தில் வியாழன் மறைந்து வெள்ளி நட்சத்திரம் தோன் றும். இதை விடி வெள்ளி என்பர். இந்த நேரத்தில் எல் லோரும் எழுந்து தங்களது வேலைகளை ஆரம்பிப்பார்கள். பறவைகளும் எழுந்து ஆர்ப்பரிக் கும். நீ இன்னும் உறங்குகிறாயே என்று ஆயர்பாடி பெண்களை ஆண்டாள் துயில் எழுப்புகிறாள். வீட்டின் பின்பக்கம் உள்ள குளத்தில் ஆம்பல் இரவு நேரத்தில் பூக்கும் பூ தன் கண்களை மூடியது. அதாவது விடிந்து விட்டது என்பதைக் கூறுகிறது. எனவே தூக்கத்தை விட்டு எழுங்கள் என்று கூறி நிற்கிறாள். அடுத்து **''திங்களும் ஆதித்யனும் எழுந்தாற் போல''** என இரண்டு கண்களும் வர்ணிக்கப்படுகின் றன. அக்கண்கள் எங்கள் மேல் பட்டால் எங்கள் சாபம் நீங்கி விடும் என்பது அவன் மேல் வைத்த நம்பிக்கை தான் காரணம். மற்றுமோர் பாசுரத்தில் பகவானின் மலரடிகளைப் போற்றி புகழ்ந்துள்ளாள்.



**''அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி...**
**கன்று குணிலா எறிந்தாய்! கழல் போற்றி**
**குன்று குடையாய் எடுத்தாய்! குணம் போற்றி**
**வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல்**
**போற்றி''**

என பகவானின் லீலைகளைப் போற்றிப் புகழந்து உள்ளாள். குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா என்று இறைவனே, பூர்ணம் என் உறவு இன்று நேர்ததல்ல அதைக் கூற முடியவில்லை. நாங்கள் புத்தியில்லாமல் உன்னை உன் பேர்சொல்லி அழைக்கிறோம். அதற்காக எங்களைக் கோபிக்க வேண்டாம்.

இரண்டாம் பாசுரத்தில் எதையெல்லாம் செய்ய மாட்டோம் என்பதை விடுத்து உன் உறவு கிடைத்த பின்பு எதையெல்லாம் செய்வோம் எனக் கூறி உள்ளாள் இங்கு. அதை ஓர் சன்மானம் எனக் கூறியுள்ளாள். அவைகள் சூடகம், தோள்வளை, தோடு, செவிப்பூ, பாடகம் எனப் பல்கலனும் யாம் அணிவோம் எனக் கூறியுள்ளாள். ஆடை உடுப்போம், அதன் பின்னே பாற்சோறு, மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக் கூடியிருந்து சந்தோஷமான சூழ்நிலையில் உண்ணுவோம்.

அடுத்து இன்றும் ஏழேழ் பிறவிக்கும் உன் அடிமையாக வாழ்வோம் என்று திடமாகக் கூறி உள்ளாள். இப்படி பகவானின் லீலைகளையும், அவனது புகழையும் போற்றிப் புகழ்ந்து திருப்பாவை அமைந்துள்ளது. அதைப் படிப்பதன் மூலம் பாதகங்கள் தீரும். அதன் மூலம் பகவானை அடைய லாம் எனத் தெளிவாக ஆண்டாள் கூறியுள்ளார்.

காஞ்சிபுரத்திலிருந்து கலவிக்குச் செல்லும் சாலையில், பாலாற்றின் தென்புறத்தில், இயற்கை எழிலுடன் கூடிய அய்யங்கார்குளம் என்ற கிராமத்துக்குச் சிறப்பு சேர்க்கிறது இவ்வூரில் அமைந்திருக்கும் ஆஞ்சநேயர் கோயில். இங்கே கோயில் கொண்ட ஆஞ்சநேயனை சஞ்சீவிராயர் என்று போற்றி வணங்குகிறார்கள். அழகான கற்கோயில் இது.

தொடர் ஆண்டு 1541 முதல் 1614 வரை விஜய நகரை ஆட்சி செய்த வேங்கடபதியின் அவையில் அமைச்சராக இருந்தவர் லட்சுமிகுமார தாததேசிகர். இவர் ஒரு முறை தலயாத்திரை செய்து வந்த போது, இங்கே திருடர்கள் வழிமறித்து அவரிடம் இருந்த பொருட்களைக் கொள்ளை அடித்தனர். உடனே லட்சமிகுமார தாததேசிகர் அந்த இடத்தில் அமர்ந்து அனுமனை நினைத்து அனுமந்தஸ்ரீ எனும் ஸ்தோத்திரத்தைக் கூறினார். அடுத்த நிமிடம் திருடர்களுக்குக் கண் பார்வை பறிபோனது. பயந்து போன திருடர்கள் தங்கள் தவறுக்கு வருந்தி மன்னிப்பு வேண்டினர். பிறகு தங்களிடம் இருந்த பொருட்களையும் சேர்த்துத் தாததேசிகரிடமே திருப்பிக் கொடுத்தனர். தன்னிடம் இருந்த பொருள், செல்வத்தையும் சேர்த்துத் தாததேசிகர் இங்கே ஆஞ்சநேயருக்கு அழகான இந்தக் கோயிலைக் கட்டினார்.

மூன்று சுற்றுப் பிரகாரங்களுடன் கூடிய இந்த ஆலயத்தின் உள்ளே சென்றவுடன் 50 தூண்களுடன் கூடிய மாமண்டபத்தையும், 25 தூண்கள் கொண்ட அர்த்த மண்டபத்தையும் காண்கிறோம். ஆலயத்தின் உள்ளே செல்லும் முன், அஞ்சனை மைந்தனின் பூரண அருளைப் பெற்றுச் செல்ல வேண்டும் என்பதற்காக அனுமனைப் போற்றும் 20 சுலோகங்களை கல்வெட்டுகளில் வடித்து அர்த்த மண்டப வெளிச்சுவரில் பொறித்து வைத்துள்ளனர்.

இங்கே மூலவராக வீற்றிருக்கும் ஆஞ்சநேயரின் திருநாமம் ஸ்ரீசஞ்சீவிராயர் என்பது. வடக்கு நோக்கிய திருமுக மண்டலம். அண்டி வந்தவருக்கு அருளை அள்ளி அள்ளி வழங்கும் அழகுக் கோலம். தன் தாசரதியான இராமபிரானின் தாசானுதாசன் என்பதால், அயோத்தி இருக்கும் வடக்குத் திக்கைப் பார்த்தபடி இருகரம் கூப்பிய நிலையில், நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார்.

ஆஞ்சநேயருக்கு என்று இவ்வளவு பெரிய தனிக் கோயிலும், அதுவும் ராஜா

# சஞ்சீவிராயர் நின்று அருளும் அய்யங்கார் குளம்



– திரு. தி. சக்திவிநாயகம்,
அய்யங்கார்குளம்,
99653 10482



கோபுரம் உள்ள தனிக்கோயில் என்பது மிகவும் சிறப்பான ஒன்று. இந்த ஆலயத்தின் அர்த்த மண்டப மேற்கூரையில் உள்ள கருங்கல் வளையங்கள், சிற்பக் கலை நயத்தை நமக்குக் காட்டுகின்றன. ஆயினும் சிற்பங்கள் சில சிதிலமடைந்து காணப்படுகின்றன.

சித்ரா பௌர்ணமி நன்னாளில் காஞ்சிப் பேரருளாளன் ஸ்ரீவரதராஜப் பெருமான் இந்த ஆலயத்திற்கு எழுந்தருளுகிறார். இங்கே திருமஞ்சனம் கண்டு, இங்குள்ள நடவாவி திருக்கிணற்றுக்கும் எழுந்தருள்கிறார். முற்காலத்தில் இந்தக் கோயிலில் பக்தர்களுக்கு அன்னதானம் அடிக்கடி நடைபெற்றுள்ளன. அதற்கு அடையாளமாகக் கற்படுகைத் தளங்கள் இருப்பதைக் காண்கிறோம். கற்படுகைகள் 15 அடி நீளமும், 5 அடி அகலமும் கொண்டிருக்கின்றன. பிரசாதம் செய்யப்படும் திருமடப்பள்ளியில் சாதத்தை கிளறுவதற்கு என்றே இரண்டு கற்படுகைகள் இருப்பதைக் காண்கிறோம். இதன் மூலம், அதிக அளவில் ஏழை எளிய மக்கள் கோயிலில் அன்னத்தை உண்டு பசியாறி இருக்கிறார்கள் என்பதை உணர முடிகிறது.

கோயிலின் பின்புறத்தில் படித்துறையுடன் கூடிய மிகப் பெரிய குளம் ஒன்று இருப்பதைக் காண்கிறோம். மன்னர் கிருஷ்ணதேவராயர் மற்றும் அச்சுததேவராயர் உதவியுடன் லட்சுமிகுமார தாததேசிக அய்யங்கார் இந்தக் குளத்தைச் சுமார் 133 ஏக்கர் பரப்பில் வெட்டினாராம். அதனால்தான் இந்த கிராமத்திற்கு அய்யங்கார்குளம் என்று பெயர் வந்ததாகக் கூறுகிறார்கள். ஸ்ரீதாதசமுத்திரம் என்றும் இந்தக் குளத்துக்கு ஒரு பெயர் உண்டாம்.

இந்த ஆலயத்தின் இன்னுமொரு சிறப்பம்சம், இங்குள்ள நடவாவி கிணறு. இது இங்கே அமைந்த விதமே சுவாரசியமானதுதான்.

இந்த ஆலய வளாகத்துக்கு உள்ளேயே ஒரு கிணறு தோண்ட முயன்றபோது கோழி கூவியது போல் குரல் கேட்டதாம். அதனால் அந்தப் பணியைப் பாதியிலேயே நிறுத்திவிட்டார்களாம்.

பின்னர் மீண்டும் ஒரு முறை தோண்ட முயன்றபோது, எண்ணெய் விற்பது போல் குரல் கேட்டதால், அப்போதும் பணி நிறுத்தப்பட்டதாம். அதன் பிறகு, மூன்றாவது முறையாக கோயிலுக்கு நேர் எதிரில் குளக்கரைக்கு கீழே கிணறு வெட்டப்பட்டது. அதுவே பாதாளக் கிணறாக, நடவாவி கிணறாக விளங்குகிறது. சித்ரா பௌர்ணமியில் திருவிழா காணும் அன்றைய தினம் பக்தர்கள் படி இறங்கிச் செல்லும் விதமாக கிணறு அமைந்துள்ளது. கிணற்றில் உள்ள தூண்களில் சித்திர வேலைப்பாடுகள் கண்களைக் கவர்கின்றன.

நான்கு பக்கங்களிலும் உள்ள பக்க வாட்டுக் கற்களில் சப்தகன்னியர் சிலைகள் அழகுறக் காட்சி தருகின்றன. கிணற்றுக்குள் வட மேற்கு மூலையில் உள்ள மண்டபத்தில்தான் காஞ்சிப் பேரருளாளன் ஸ்ரீவரதராஜப் பெருமாள் எழுந்தருளுகிறார்.

மிகப் பழமையான ஆலயமாகவும், வெளி உலகிற்கு தெரியாத ஆலயமாகவும் விளங்குவது வடகரை மஹாலக்ஷ்மி ஆலயம் ஆகும். இதன் பெருமையும், பாரம்பரியமும் பக்கத்து மாநிலமான கேரளவாழ் மக்களால் தற்சமயம் தெரிய வந்துள்ளது. கேரளாவில், பள்ளிப்புரம் எனும் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தங்களின் குலதெய்வம் குறித்து பிரசன்னம் பார்த்தபோது, அதில் மஹாலக்ஷ்மியின் ஆதிகோயிலாக அமைந்த இந்த வடகரை மஹாலக்ஷ்மி திருக்கோயில் எனத் தெரிய வந்தது.

### ஆலய அமைப்பு

இவ்வாலயம் சஞ்சீவராயர் ஆலய குளத்தின் வடகரையின் மேற்புறத்தில் கிழக்கு முகமாய் அமைந்துள்ளது. இதில் புதிதாக வடிவமைக்கப்பட்ட தாயார் மஹாலக்ஷ்மி நின்ற திருக்கோலத்தில், நான்கு திருக்கரங்களில் சங்கு, சக்கரம், நெற்கதிர், கிளி என புன்னகை பூத்த அருள் வடிவமாகக் காட்சி தருகிறார்.

# திருமழிசை ஆழ்வார் கண்ட திருவேங்கடம்

“தை” மாதத்திற்கு நிறைய சிறப்புகள் உண்டு. மகர மாதம் என்று சொல்லுவார்கள். உத்தராயண காலத் தொடக்க மாதம். திருமலை அப்பனுக்கு இரத சப்தமி உற்சவம் நடக்கும் மாதம். இது தவிர இன்னொரு சிறப்பும் தை மாதத்திற்கு உண்டு. இந்த மாதத்தில் மக நட்சத்திரத்தில் திருமழிசை ஆழ்வார் அவதரித்தார். இவருடைய திருநட்சத்திரத்தைப் பற்றி மணவாள மாமுனிகள் பாசுரம் இது,

*தையில் மகம் இன்று தாரணியீர் ஏற்றம் இந்தத்*
*தையில் மகத்துக்கு சாற்றுகின்றேன் - துய்யமதி*
*பெற்ற மழிசை பிரான் பிறந்த நாளென்று*
*நற்றவர்கள் கொண்டாடும் நாள்*

இந்த ஆழ்வாருக்கு திருமலையப்பன் மீது அபாரமான பக்தி. திருமலை அப்பனுக்கும் ஆழ்வார் மீது அன்பு. திருமழிசை ஆழ்வார் தவசீலர். யோகீஸ்வரர். பல காலம் யோக நிலையிலே இருப்பவர். அகக்கண்ணால் எப்பொழுதும் எம்பெருமான் தரிசனத்தை இடையறாது செய்பவர். ஒரு முறை திருவேங்கடத்தில் நடைபெறும் திருவோணத் திருவிழாவான புரட்டாசி பிரம்மோத்ஸவத்தை காணப் புறப்பட்டு வருகின்றார். ஆனால் தன்னைக் காணும் ஆழ்வாருக்கு, தான் முன் சென்று காட்சி தர வேண்டும் என்று எம்பெருமான் திருவிழா அம்சங்களோடு வாரிச் சுருட்டிக் கொண்டு ஆழ்வார் இதயத்திலே புகுந்து, எழில் காட்சி தந்தாராம். அப்படிப்பட்ட ஆழ்வார் தம்முடைய இரண்டு பிரபந்தங்களிலும் திருமலையப்பனை மங்களாசாசனம் செய்திருக்கின்றார்.

அவருடைய அருமையான பிரபந்தம் திருச்சந்த விருத்தம். தனக்கு ஒரு ஒப்பில்லாத அந்த பெருமானைப் பாடும் சந்தப் பாடல்களால் அமைந்தது. அதில் ஒரு பாடல் தான் இது.

*குன்றில் நின்று வான் இருந்து நீள் கடல்*
*கிடந்து மண்*
*ஒன்று சென்றது ஒன்றை உண்டு அது ஒன்று*
*இடந்து பன்றியாய்*
*நன்று சென்ற நாளவற்றுள் நல் உயிர் படைத்து*
*அவர்க்கு*
*அன்று தேவு அமைத்து அளித்த ஆதிதேவன்*
*அல்லையே?*

இப்பாசுரத்தைத் தொடங்கும் பொழுது திருமலை என்று சொல்லித் தான் தொடங்கு



- பேராசிரியர்
எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963.

## 2024, பிப்ரவரி மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 09 | புரந்தரதாசர் ஆராதனை. |
| 10–18 | தேவுனிகடபா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம். |
| 16 | இரதசப்தமி, பீஷ்மாஷ்டமி, நகரி ஸ்ரீகரிய மாணிக்கஸ்வாமி கல்யாணோத்ஸவம். |
| 17–23 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி தெப்போத்ஸவம். |
| 19 | திருக்கச்சி நம்பி சாத்துமுறை |
| 21 | குலசேகராழ்வார் திருநட்சத்திரம் |
| 24 | குமாரதாரா தீர்த்த முக்கோட்டி |
| 29– மார்.8 | ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |

கின்றார். காரணம் பகவானைப் பார்ப்பதற்கு முன்னாலே நாம் திருமலையைப் பார்த்து விடுகின்றோம். எனவே முதலில் நம்முடைய கண்ணுக்குத் தெரிவது திருமலை தான். அதனால் "குன்றில் நின்று" என்று பாசுரத்தை தொடங்குகின்றார்.

குன்று என்றாலே திருமலை தான்.

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து
நெடியோன் குன்றமும் தொடியோள் பெளவமும்
தமிழ் வரம்பறுத்த தண்புனல் நல்நாட்டு

என்று சிலப்பதிகாரத்தில் வருகின்றது. நெடியோனாகிய எம்பெருமானைக் குனிந்து தாங்கி நிற்பதால் குன்று.

''உறுமோ பாவியேனுக்கு'' (திருவாய் 8.10.3) என்ற திருவாய்மொழிப்பாசுரத்தில் ''அவனடியார் சிறுமாமனிசராய் என்னையாண்டார்'' (3,4 அடிகள்) என்ற அடிகளில் "சிறுமாமனிசர்" என்பதற்கு பட்டர் அருளிய இதிகாசம்.

பட்டர் சிறுவனாக இருந்தபொழுது ஒரு நாள் அவர் தந்தை (கூரத்தாழ்வான்) திருவாய்மொழி அநுசந்திக்கும் போது இப்பாசுரத்தில் வரும் "சிறு மாமனிசராய்" என்ற சொற்றொடரைக் கேட்டு சிறுமாமனிசர் என்றால் சிறியராயும், பெரியராயும் உள்ள மனிசர் என்பது பொருளல்லாவா?

ஒன்றுக்கொன்று எதிர்த்தட்டான சிறுமை பெருமை என்கிற குணங்கள் இரண்டும் ஒரு பொருளினிடத்து ஒன்று சேர்ந்திருக்குமோ? என்று தமது திருத்தந்தையாரை வினவ நின்றார்.

அதற்கு ஆழ்வான் ஆலோசித்து "பிள்ளாய்! நன்கு வினவினாய்; உனக்கு உபநயனம் ஆகாமையால் இப்போது வேத சாத்திரங்களைக் கொண்டு விடைசொல்லலாகாது; ஆயினும் பிரத்தியட்சத்தில் காட்டுகின்றோம் காண்'' என்று சொல்லிச் சில பெரியோர்களைக் காட்டி, திருமேனி சிறுத்து, ஞானம் பெருத்திருக்கின்ற சிறியாச்சான் அருளாளப் பெருமாள் எம்பெருமானார் போல்வாரைச் சிறு மாமனிசர் என்னத் தட்டில்லையே; முதலியாண்டான், எம்பார் முதலிய பெரியோர்கள் உலகத்தாரோடு ஒக்க அன்னபானாதிகளைக் கொள்வதோடு எம்பெருமான் பக்கல் ஈடுபடுவதற்கு பரமபதத்து நித்திய சூரியகளைப் போலுதலால் இப்படிப்பட்டவர்கள் சிறுமாமணிசர் என்னத் தக்கவர்களன்றோ?

இங்ஙனமே வடிவு சிறுத்து மகிமை பெருத்தவர்களும், மனிதர் என்று பார்க்கும் போது சிறுமை தோன்றினும் பகவத் பக்தி, ஞானம், அனுட்டானம் முதலிய நற்குணங்களை நோக்குமளவில் நித்திய முக்தர்களிலும் மேன்மை பெற்று விளங்குபவர்களும் ஆன மகாபுருஷர்களையே ஆழ்வார் "சிறுமாமனிசர்" என்று குறித்தருளினார் என்று அருளிச் செய்ய, பட்டரும் அது கேட்டுத் தகும் தகும் என்று இசைவு கொண்டனர்.

அதுபோல ஆழ்வார் குன்று என்று பாடினாலும் அதனுடைய பெருமை அளவற்றது. ''வேங்கட மாமலை ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே'' என்று நம்மாழ்வார் பாடியிருப்பதால் அது மாமலை.

மா என்பதற்கு செல்வம், திருமகள், பெருமை, பெரியது என்று பல பொருள்கள் உண்டு.

கிருஷ்ணாவதாரத்தில் பசுக்களையும், ஆயர்களையும் காக்க கோவர்த்தனகிரியைத் தூக்கினான் கண்ணனெம்பெருமான். தன்னுடைய ஒற்றை விரலாலே ஏழு நாட்கள் தூக்கிக் கொண்டு இருந்தானாம். இதை ஆழ்வார், "குன்றம் ஏந்தி குளிர் மழை காத்தவன்" என்கிறார்.

அந்த குன்று, அனுமனை போலவும், அனந்தனைப் போலவும், கருடனைப் போலவும் தானும் எம்பெருமானைச் சுமக்க ஆசைப்பட்டதாம்.

அப்படி ஆசைப்பட்டு ஏழு மலைகளாக நின்று ஏழுமலையானைச் சுமந்து ஆனந்தப்படுகிறதாம். அப்படி ஆனந்தப்படும் குன்றை நாம் பார்க்கின்ற போது நமக்கும் ஆனந்தத்தை அள்ளித் தருகின்றது.

*"குன்றம் ஏந்தி நின்றான் அன்று!*
*குன்றம் ஏந்த நின்றான் இன்று!!"*

பாசுரத்தில் முதல் வரியில் அர்ச்சாவதாரத்தைப் பாடிவிட்டார். அடுத்து எங்கே இருந்து வந்தான் என்ற வழியைப் பாடுகின்றார். பல்வேறு அவதாரங்களை எடுத்தான். பற்பல உயிர்களைப் படைத்தான். அந்த உயிர்களின் தன்மைக்கேற்ப பல தேவதைகளையும் படைத்தான். இப்படி எல்லாக் காரியமும் செய்ததால் அவன் ஆதிதேவன்.

அந்த ஆதிதேவன் தான், இத்தனை காரியமும் செய்து விட்டுத் திருவேங்கட மலையிலே நிற்கின்றான். எத்தனை அழகான அர்த்தம் பாருங்கள். அவன் என்னென்ன அவதாரம் செய்தான் என்பதைச் சொல்லுகின்றார். திருவிக்கிரம அவதாரம் எடுத்து மூன்று உலகங்களையும் அளந்தான். இன்னொரு சந்தர்ப்பத்தில் (பிரளய காலத்தில்) இந்த உலகங்களை எல்லாம் தன்னுடைய வயிற்றுள் அடக்கிக் கொள்ளும் படியாக உண்டான் (உலகம் உண்ட பெருவாயன்). இன்னொரு சந்தர்ப்பத்தில் இரண்யாட்சனை அழிக்க வராகமாய் உருவம் எடுத்து பூமியை மீட்டான்.

பூமிக்கும் எம்பெருமானுக்கும் உள்ள (உடையவன், உடைமை) சம்பந்தத்தைக்காட்டி, இப்படிப்பட்ட பூமியில் உள்ள சேதனர்களாகிய நமக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பு காட்டி நம்மை காத்தருள்வதற்காகவே அவன் கலி காலத்தில் திருவேங்கடம் வந்து நின்று அருள்கிறான் என்று பாடுகிறார் திருமழிசை ஆழ்வார்.

"நின்று" என்ற ஒரு சொல்லால், நேற்றும் நின்றான், இன்றும் நிற்கின்றான், நாளையும் நின்று பின்னானார் வணங்கும் சோதியாக அருளுவான் என்று முக்காலத்தையும் உணர்த்துகின்றார்.

இறைவனின் 5 நிலைகளிலே பர, வியூக, விபவ நிலைகளைச் சொல்லி, ஆனால் அவைகள் எல்லாம் இந்த அர்ச்சாவதார சிறப்பிலே அடங்கும் என்ற அற்புதத்தைச் சொல்லி, அந்த அர்ச்சாவதார திருக்கோயில்கள் எத்தனை இருந்தாலும் கூட, அத்தனையும் இத்திருமலையில் அடங்கும் தன்மை உடையது என்று திருமலையின் பெருமையையும், திருமலை அப்பனின் பெருமையையும் கூறி முடிக்கின்றார்.

திருமழிசை ஆழ்வார் திருநட்சத்திரத்தை தை மகத்தில் கொண்டாடும் போது திருமலை அப்பனை மங்களாசாசனம் செய்யும் இந்தப் பாசுரத்தையும் நினைத்துக் கொள்வோம். *பாசுரம் அறிவோம்...*

## ஸப்தகிரி நவம்பர் 2023 விடைகள்

1. பஞ்சமி திதி.
2. திருச்சுகனூர்.
3. பஞ்சமி தீர்த்தம்.
4. நாராயணீயம்.
5. 13 திவ்ய தேசங்கள்.
6. பீஷ்மகன்.
7. சிசுபாலன்.
8. சௌனகாதி முனிவர்கள்.
9. அனந்தாழ்வான்.
10. திருப்பாணாழ்வார்.
11. திருவேங்கடவன்.
12. பிரம்மாண்ட புராணம்.
13. ருக்மிணி, சத்யபாமா.
14. திருமங்கையாழ்வார்.
15. தீபாவளி பண்டிகை.



## வினாடி வினா

## போட்டி எண். 16

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி ஆ.ஜிலா, திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி மாவட்டம்.
2. செல்வன் ஜெயந்த ராகவன் சௌரிபாளையம் ரோடு, கோயம்பத்தூர் மாவட்டம்.
3. செல்வன் சிவதிவ்யன் நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.



# பதஞ்சலியின் யோக சூத்திரங்கள்

ஆகஸ்ட் மாத இதழின் தொடர்ச்சி...

**சூத்திரம் 17 :** *“விதர்க விசாரானந்தாஸ்மிதானு கமாத் ஸ்ம்ப்ரக்ஞாத:”*

விதர்க, விசார, ஆனந்த, அஸ்மிதா இவற்றின் தொடர்பால் ஏற்படும் சமாதி நிலையே சம்பிரக்ஞாத சமாதி நிலை என்று உணர்ந்து கொள்ள வேண்டும். சுத்தாத்ம தத்துவமும், ஞான பிரகாசமும் கொண்ட ஆத்ம ஜோதியைப் பஞ்ச கோசங்களின் செயல் மூடி மறைத்துக் கொண்டுள்ளன. தேக சம்பந்தமுடைய பஞ்ச கோசங்களின் செயலிலிருந்து ஆத்மாவை விலக்கும் போது விவேகம் பிறக்கிறது.

**சூத்திரம் 18 :** *“விராம ப்ரத்யயாப் பயாஸபூர்வ: ஸம்ஸ்கார சேஷோ அன்ய:”*

சாதகன் பர வைராக்யம் அடைந்தவுடன் இயல்பாகவே உலகியல் விஷயங்களில் ஆசைகளில் கவனம் செலுத்தமாட்டான். அவன் சித்தம் சலனங்களின்றி அடங்கி விடும். தியானம் முற்றியபின் “நான் என்கிற உணர்வு” கரைந்து, “ஆத்ம சொரூப உணர்வு” மேலோங்குவதே அசம்பிரக்ஞாத சமாதி என்று கூறுகிறார்கள்.

**சூத்திரம் 19 :** *“பவப்ரத்யயோ விதேஹ ப்ரக்ருதிலயானாம்:”*

மேற்சொன்ன விதர்க, விசார முதலிய ஸ்தூல, சூட்சும, தியான, சமாதிகளை கடந்த பின், சித்தமும் அடங்கிய பின், இறுதிகட்டமான அசம்பிரக்ஞாத சமாதியை எட்டுவதற்கு முன் இறந்து போன யோகிகளே “விதேஹர்கள், பிரக்ருதிலயர்கள்” ஆவார்கள். அவர்கள் சித்தம் பிரகிருதி லய சிருஷ்டியில் கலந்த பின்பும் “நான் என்கிற உணர்வு” அழியாமல் இருக்கும். “நான் என்கிற உணர்வு” முற்றிலும் கரைந்த பின்தான் மோட்சம் கிட்டும்.

**சூத்திரம் 20 :** *“ச்ரத்தா வீர்யஸ்ம்ருதிஸமாதி ப்ரக்ஞாபூர்வக த ரேஷாம்:”*

மற்ற சாதகர்கள் ஆர்வம், அக்கறை மற்றும் தன்னம்பிக்கையுடன் கூடிய சிரத்தை, வீர்யம் என்கிற மன உறுதி, நினைவாற்றல், அறிவாற்றல், சமாதி ஆகியவற்றை கடைபிடித்து சமாதி அடைவார்கள். சித்தத்தில் முக்குண சலனங்கள் ஒழிந்த பின் சத்தியத்தை உணர்த்தும் “ரிதம்பரா” என்கிற “சமாதி பிரக்ஞா” உதயமாகிறது.

**சூத்திரம் 21 :** *“தீவ்ர ஸ்ம்வேகானாமாஸன்ன:”*

அப்யாசமும் வைராக்கியமும் அதிதீவிரம் அடைந்த பின் மிக விரைவில் அசம்பிரக்ஞான சமாதி கிடைக்கும். தீவிர முயற்சி மேற்கொள்வதால் இடையூறுகளை எல்லாம் கடந்து சென்று விடுவார்கள்.

**சூத்திரம் 22 :** *“ம்ருதும்த்யாதி மாத்ரத்வாத்ததோ அபி-விசேஷ:”*

சிரத்தை, மனஉறுதி, நினைவாற்றல், பேரறிவு இவையெல்லாம் உள்மனத்தின் அதிசூட்சும சக்திகள். இவற்றின் ஏற்றத்தாழ்வுகளால் சமாதி சித்தி விரைவாக அல்லது காலதாமதமாகக் கிடைக்கும்.

**– திரு.எம்.எஸ்.சுகுமார்,சென்னை,**
**8838252312.**

# வைணவக்குறுக்கெழுத்துப் புதிர் -90

## இடமிருந்து வலம்


1. ஸ்ரீராமபிரானின் தந்தை....(5)
5. கோவிந்தன் அருளுமிடம்.....(4)
6. ரதியின் கணவன்.....(5)
9. பரதனின் மனைவி....(4)
12. தமிழகத்தின் புனித நதிகளில் முதன்மையானது.....(3)
14. ஸ்ரீகிருஷ்ண பகவானின் தாய்மாமன்.....(4)
16. ஆதிசங்கரர் தன் சீடர் சனந்த ருக்கு சூட்டிய பெயர்.....(6)
19. விஷ்ணு பகவானின் வலது மேற் திருக்கரத்தில் இருப்பது.....(5)
22. ஆதிசங்கரரின் தாயார்....(6)

## வலமிருந்து இடம்

3. பிரம்மதேவனின் மனைவி...(5)
4. அத்திரி ரிஷியின் மனைவி ....(4)
11. வரமருளும் பெருமாள்....(4)
13. சீதா தேவியின் பெயர்களுள் ஒன்று....(3)
15. தசரதன் அரசாண்ட நாடு.....(4)
20. விஷ்ணு பகவானின் மூன்றாவது அவதாரம்.....(4)
23. தாமரை....(4)
24. காஞ்சி வரதராஜப் பெருமாளோடு பேசியவர்....(11)

## மேலிருந்து கீழ்

1. அக்ஷயதிருதியன்று அக்ஷயப் பாத்திரம் பெற்றவர்.....(4)
2. உலகைக் காப்பவர்.....(4)
4. தேவர்களுடன் அடிக்கடி சண்டையிட்டவர்கள்.....(6)
5. பூலோக வைகுந்தம்.....(7)
7. ஸ்ரீகிருஷ்ணனின் பெயர்களில் ஒன்று.....(6)
8. பாற்கடலில் அமிர்த கலசத்துடன் தோன்றியவர்....(6)
10. இராவணனின் சகோதரர், விஷ்ணு பக்தர்....(5)
17. ஆதிசங்கரரின் தந்தையார்...(4)




**தொகுப்பு : திருமதி இராஜகுமாரி, ஆரணி, 99762 38430**

புதிருக்கு விடை அறிய 41ம் பக்கம் பார்க்கவும்...

## கீழிருந்து மேல்

18. சத்ருக்கனின் மனைவி.....(7)
21. ஸ்ரீராமாநுஜரின் அவதாரத் தலம்....(7)
22. எட்டு வயதில் சன்யாசியானவர்....(7)

## மங்கள சுலோகங்கள்



*க்ருஷ்ணானந்தமுகுந்தமுராரே*
*வாமந மாதவ கோவிந்த ।*
*ஸ்ரீ தர கேசவ ராகவ விஷ்ணு*
*லக்ஷ்மிநாயக நரசிம்ஹ ॥*

**கிருஷ்ணன், ஆநந்தன், முகுந்தன், முராரி, வாமனன், மாதவன், கோவிந்தன், ஸ்ரீதரன், கேசவன், இராகவன், விஷ்ணு, லக்ஷ்மி நாயகன், நரசிம்மன் ஆகியோரை நினைத்து கொண்டு சாப்பிடுகிறேன்.**



# ஆநிரைகளின் ஆயர்பாடி நிலமது முல்லை

முனைவர். ந. மைதிலி, சென்னை,
98843 47886.

ஐம்பெரும் நிலங்களில் முல்லை நிலம், காடும் காடு சார்ந்த இடத்தையும் குறிப்பதாகும். இங்கு வசிப்போர் ஆயர்கள். இவர்கள் ஆநிரைகளை மேய்த்து அதன் மூலமாக வரும் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்பவர்கள். இந்த நிலத்திற்குரிய தெய்வம் திருமால். அதனை *"மாயோன் மேய காடுறை உலகமும்"* என்பார் தொல்காப்பியர். இந்த முல்லை நிலமாகிய ஆயர்பாடியில் இடையர் குலத்தைச் சேர்ந்தவர்களாகிய நந்தகோபன், யசோதையிடத்து வளர்ந்தவர்தான் நாம் போற்றும் கண்ணபிரான். அவன் வளர்ந்த ஆயர் பாடியை ஆண்டாள் சீர்மல்கும் ஆயர்பாடி என்கிறார். எந்தக் காரணத்தினால் கண்ணன் வளர்ந்த ஆயர்பாடி சீர்மிகும் ஆயர்பாடி எனப்பட்டது என்பதை திருப்பாவை வழிக் காண்பது இக்கட்டுரை நோக்கமாகும்.

சீர்மிகும் ஆயர்பாடி என்பது சிறப்புமிக்க, வளம் நிறைந்த பாடி வாசிகளாகிய ஆயர்கள் வசிக்கும் இடம்.

## ஆநிரைகளின் முக்கியத்துவம்

தமிழ் இலக்கணம் புறத்திணைகளாக "வெட்சி, கரந்தை, வாகை..." எனப் போர் செய்யும் முறைக்கு இலக்கணம் வகுக்கும். எதிரி நாட்டினைக் கைப்பற்ற விரும்புபவன் அந்த நாட்டுச் செல்வமான முக்கியத்து வம் வாய்ந்த ஆநிரைகளைப் பகைவர்கள் அறியா வண்ணம் கவர்ந்து வருவான். இதனை வெட்சி என்பர். இதனைத் தொடர்ந்து, ஆநிரைகளை இழந்த மன்னன் அதை மீட்க ஆணை பிறப்பிக்க, வீரர்கள் மீட்டு வருவர். இந்த நிகழ்வு கரந்தை எனப்படும். இங்கு ஒன்றை காணவேண்டும். ஆநிரைகளை கவர்வதும் அதை மீட்பதன் நோக்கமும் போர் செய்ய ஆயத்தம் என்று குறிப்பாக உணர்த்துவது. ஏன் ஆநிரைகள் தேர்வு செய்யப்பட்டன என்பதை ஆராய இக்கட்டுரைக்கான விடை கிடைக்கும்.

## ஆநிரைகள் தந்த செல்வம்

மாடு என்றால் செல்வ வளம் என்று பொருள். ஆக ஒரு நாட்டின் செல்வம் அந்நாட்டு ஆநிரைகளை வைத்து கணக்கீடு செய்யப் பட்டுள்ளது. எனவே ஆயர்களின் வாழ்வாதாரம் ஆகிய ஆநிரைகள் செல்வமாகும். எனவே கண்ணபிரான் வாழ்ந்த ஆயர்பாடி சீர்மல்கும் ஆயர்பாடியாயிற்று. அடுத்து அவை எப்படி வளம் சேர்த்தன என்பதைப் பார்த்தால் நினைக்க இனிப்பாக உள்ளது.

ஆண்டாள் ஓங்கி உலளந்த உத்தமன் என்று தொடங்கும் பாடலில் *"வாங்க குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்"* என்று பாடியிருப்பார். கொடை என்றால் வேண்டினார்க்கு வேண்டிய வண்ணம் அளிப்பது. ஆனால் வள்ளல் என்பது கேட்காமல் வாரி வழங்கும் தன்மை. ஆயர்பாடி பசுக்கள் கொடையாளியாக இல்லாமல் வள்ளலாக இருந்ததாம். என்னே வளமை!

ஒரு குடம் பாலைப் பொழிந்த பின்னர் அடுத்தடுத்த குடங்கள் நிரம்பியபடி இருக்க, ஒன்றிரண்டு பசுக்கள் அல்ல பெரிய பசுக்கூட்டம் இருந்துள்ளது. அப்படியென்றால் செல்வ வளம் எந்த அளவிற்கு இருந்திருக்கும் என்பதைச்

சொல்லவும் வேண்டுமா? அதனால் ஆயர்பாடி வற்றாத செல்வம் மிகுந்த பதியாய் விளங்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை. இக்கருத்தை ஆண்டாள் 'நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்' என்பார். எம்பெருமான் ஆங்கிருக்கையில் வளமைக்கு பஞ்சமா? இந்த செல்வ வளம் திருப்பாவை நூலில் பல இடங்களில் விரவிக் கிடக்கின்றன. இதற்கு மற்றுமோர் சான்று.

*ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப*
*மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்*

இதற்கான பொருள், தகுந்த நன்கு சுத்தம் செய்யப்பட்ட பாத்திரங்களில் பால் கறக்க, தவறாமல் குறையாமல் வள்ளல் தன்மை கொண்ட பெரும் பசுக்கள் பால் சொரிந்தவண்ணம் உள்ளதாம். கன்றையுடைய பசுக்களிடமிருந்து பாலைக் கறப்பவர்களாகிய கோவலர்கள் குற்றம் ஒன்று அறியாதவர்கள் என்று கூறியுள்ளதன் நோக்கம், பாலைத் தாம் மட்டும் பெறாமல் கன்றுகட்கும் வெகுவாக வழங்கி எஞ்சியுள்ள பாலை எடுத்துக் கொள்வார் என்பதாம். இதனை *''கற்றுக் கறவைகணங்கள் பல கறந்து.... குற்றம் ஒன்றில்லா கோவலர்''* என்ற தொடர் மூலம் அறியலாம்.

மேலும், பசுக்கூட்டம் ஒப்ப எருமைகள் ஆங்கு மிக அதிகமாக இருந்தமை பாசுரம் வழி தெரியவருகிறது.

*கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு*
*மேய்வான் பரந்தன காண்*

காலைப்பொழுது மலர, எருமைகள் புல்லை மேயும் பொருட்டுச் சென்று எங்கும் பரவின என்பதால் எருமைத்தொகுதி விளங்கும். மேலும் ஓர் சான்று

*கனைத்திளங் கற்றெருமை கன்றுக்கிரங்கி*
*நினைத்து முலைவழியே நின்று பால்சோர*
*நனைத்தில்லம் சேறாக்கும்.*

அடடா! இதுவன்றோ வளமை. கன்றின் குரல்கேட்ட தாயெருமை இரக்கமுற்று கன்று பால் பருகுவதாக எண்ணி முலைவழி பால் பொழிய வீடனைத்தும் பால்சேறு ஓடிய தாம். கண்ணன் இருக்கையில் இந்நிகழ்வுகள் எம்மாத்திரம்?

எருமைகள் கன்றுக்கு ஈந்ததா? அன்றி கண்ணனுக்கு ஈந்ததா? அவனல்லவோ அஃதறி வான். பாலின் மிகுதியால் நெய் கிடைக்க, பாற்சோறு பொங்கி அது மூடும்படி நெய்யிட்டு, கூடி இருந்து உண்போம் என்கிறார் கள். சீர்மல்கிய ஆயர்பாடிக்கு இதைவிட வேறென்ன சான்று தேவை?

“பாற்சோறு மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக் கூடி இருந்து...” என்றும், “கறவைகள் பின் சென்றுகானம் சேர்ந்து உண் போம்” என்கிறார்கள்.

நம்பினார் கெடுவதிலலை நான்கு மறை தீர்ப்பு இதுவே முடிந்த முடிவு.



## .... எம்பெருமானின் கருணை ....

**செல்வத்துப் பயன் ஈதல், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல், உடம்பை வளர்க்கும் உபாயம் அறிதல் முதலானஅனைத் தும் ஆயர்களிடம் இருந்துள்ளதை எண்ணுந்தோறும் கிருஷ்ண பரமாத்மா ஜீவாத்மாக்களை நல்ல வழியில் நடத்தியதை ஐயமுற உணரலாம். எம்பிரான் தமக்கே உரியவன் என்று ஏதுமறியா ஆயர்கள் பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்தவனே என்று சொல்லி பெருமை கொள்கின்றனர். தாங்கள் வாழும் ஆயர்பாடி சீர்மல்கி இருக்கக் காரணம் அந்தமும் ஆதியும் இல்லா கோவிந்தனே என்று நம்பினர்.**

கண், காது, மூக்கு, வாய் (நாக்கு), உடம்பு (தோல்) என்னும் ஐம்புலன்கள் சிற்றின்பத்தை அநுபவிக்க உன்னை இழுத்துச் செல்லும். சிற்றின்பம் அழிவைத் தரக்கூடியது. துயரறு சுடரடியான எம்பெருமானை அடைந்து பேரின்பம் பெற ஒரேவழி திருநாம சங்கீர்த்தனமே என்று உபதேசம் செய்தவர் தொண்டரடிப் பொடி ஆழ்வார். அவர் அருளிச் செய்த திவ்யப்ரபந்தம் "திருமாலை". முதல்பாசுரத்தில் "காவலில் புலனை வைத்து" என்று ஆரம்பித்து, "அரங்கமாநகருளானே" என்று பகவன் நாம சங்கீர்த்தனம் செய்து நமக்கு நல்வழி காட்டிய இவ்வாழ்வார், கும்பகோணம் அருகே திருமண்டங் குடியில் மார்கழி மாதம், கேட்டை நட்சத்திரத்தில், செவ்வாய்க்கிழமை, வைஜயந்தி என்னும் வனமாலை யின் அம்சமாக அவதரித்து, "இவரே திருமாலின் திருமார்பு" என்று அழைக்கப்படும் அளவுக்குப் பெருமை பெற்றவர். பெற்றோர் சூட்டிய திருநாமம் விப்ர நாராயணர்.

அடியார்க்கு அடியனாக, தொண்டர்க்குத் தொண்டனாக வாழ்ந்ததனால் தொண்டரடிப்பொடி ஆழ்வார் என்னும் திருநாமம் பெற்றார். இவருடைய பிரார்த்தனையும் அதுவே (திருப்பள்ளியெழுச்சி 10),

*"தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து*
*தோன்றிய தோல் தொண்டரடிப்பொடியென்னும்*
*அடியனை, அளியன் என்றருளி*
*உன்னடியார்க்கு ஆட்படுத்தாய்"*

கைங்கர்யம் பூமாலை பாமாலை சூட்டுவது. பகவத் அடியவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்பதொன்றே இவர் பிரார்த்தனை.

ஐந்து இந்திரியங்களைக் காவலில் வைத்து, வெளியில் ஓடாதபடி சிறையில் அடைத்து, அடக்கி ஆளவேண்டும். இப்படிச் செய்தால் நரக பாதையில் இருந்து தப்பிப் பிழைக்கலாம். ஐம்புலன்களை வென்ற ஜீதேந்திரியன் அறநெறி வழுவாதவன். இந்த ஐம்புலன்களும் நம் சரீரத்திலேயே நம்முடனேயே வாழும் நம் பகைவர்கள். நம்முள் வாழ்ந்து கொண்டு நம்மை வதைக்கும் அந்தரங்க உள் எதிரிகள். திருநாம சங்கீர்த்தனம் செய்தால் யமனோ, அவனடி கீழ்படிந்து வேலை செய்யும் யமதூதுவர்களோ நம்மை அணுக மாட்டார்கள் என்கிறார் ஆழ்வார். அதுமட்டுமல்ல. பகவத் நாம சங்கீர்த்தனம் செய்து, சகஸ்ர நாமங்க ளைச் சொல்லி, கலி தீண்டாதவாறு, யமபட்டர்களின் தலைகள் மீது அடியிட்டு வாழலாம் என்கிறார்.

# புலன்களைக் காவலில் வை

– திரு. எஸ்.சுதர்சனம், நங்கை நல்லூர்,
9962788065.



''காவலில் புலனை வைத்துக் கலிதன்னைக்
கடக்கப் பாய்ந்து
நாவலிட்டு உழிதருகின்றோம், நமன் தமர்
தலைகள் மீதே
மூவுலகு உண்டு உமிழ்ந்த முதல்வ! நின் நாமம்
கற்ற
ஆவலிப்பு உடைமை கண்டாய் அரங்கமா
நகருளானே!''

''பச்சை மா மலைபோல் மேனி, பவளவாய் கமலச் செங்கண் அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே'' என்று பகவானின் திருக்கல்யாண குணங்களைப் பாடுகிறார். திருவரங்கத்தில் அரங்கனை சேவித்துக் கொண்டே கண்ணனை நினைக்கிறார். "இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம்'' என்று பாடுகிறோம். திருவரங்கத்தில் அர்ச்சை வடிவில் இருப்பவனும், வேங்கடத்தில் கோவிந்த நாமத்துடன் வாசம் செய்பவனும் ஒன்றே என்கிறார்.

''மொய்த்த வல்வினையுள் நின்று, மூன்று
எழுத்துடைய பேரால்
கத்திர பந்தும் அன்றே பராங்கதி கண்டு
கொண்டான்''

மூன்றெழுத்துடைய திருநாமம் விஷ்ணு, ரங்கா, கண்ணா, கேசவா, மாதவா என்று பல இருப்பினும், விஷ்ணு தர்மம் என்னும் நூல் க்ஷத்திரபந்து (கத்திரபந்து) கோவிந்த நாமம் சொல்லியே நற்கதி அடைந்தான் என்று உறுதிப்படுத்துவதால், மூன்று எழுத்து நாமம் "கோவிந்த" என்பது தெளிவாகிறது.

திருவரங்கத்தில் பூமாலை கைங்கர்யம் செய்யும் ஆழ்வார் கோவிந்த நாமம் சொல்லி திருவேங்கடத்தானை வணங்குகிறார் என்பது தெளிவாகிறது. ''சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவன் ஆவான்'' (திருமாலை 7) ஒரே ஒரு வில்லால் இலங்கையை அழித்த எம்பெருமான் ஸ்ரீராமனே சர்வேஸ்வரன் என்கிறார்.

''கற்றினம் மேய்த்த எந்தை கழலிணைப் பணிமின் நீரே'' (திருமாலை 9) பசுக்கன்றுகளையும், பசுக் கூட்டங்களையும் மேய்த்த ஸ்ரீகிருஷ்ணனே முழு முதற்கடவுள் என்று கூறி, கண்ணன் கழல்கள் வணங்குமினோ என்று உபதேசம் செய்கிறார். அரங்கனே ராமன், அரங்கனே கிருஷ்ணன், அரங்கனே திருவேங்கடவன் என்று நிரூபிக்க முயலும் முயற்சியின் அழகே அழகு. யம தர்ம ராஜாவும், முத்கலன் என்பவனும் பகவத் நாம மகிமையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அதை நரகத்தில் உள்ள பாப பலன்களை அநுபவிக்கும் சில பாவிகள் கேட்டார்கள். துக்கத்திற்கே ஸ்தானமான நரகமே சுகஸ்தானமான சுவர்க்கமாக மாறியதாம்.


பகவத் நாமம் இவ்வளவு பெருமை வாய்ந்தது என்று கூறி, பகவத் நாம சங்கீர்த்தனத்தின் பெருமையை நமக்கு எடுத்துக் கூறுகிறார் ஆழ்வார். முத்கலன் ஒருபாவி, பாவிகளின் தலைவன். பல தீவினைகளைச் செய்தவன். அவன் மாண்டபிறகு நரகம் சென்றான். அவனிடம் யமன் உரையாடு கிறான். முத்கலனுக்கு பகவந்நாம மகிமையைப் பற்றி உபதேசிக்கிறார். அதைக் கேட்ட நரகவாசிகள், தற்செயலாகக் கேட்டவர்கள் பயனடைந்தார்கள், வாயில் நா படைக்கப்பட்டது பகவத் நாமத்தைச் சொல்வதற்காகவே. நாராயணா என்று சொல்லிப் பயனடைய நம்மை அழைக்கிறார் ஆழ்வார்.

''சங்க சக்ர கதாபாணே! த்வாரகா நிலைய
அச்சுதா
கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம்''

என்று சொல்லி ஸ்ரீகிருஷ்ணனிடம் கோவிந்த நாமமுடைய திருவேங்கடவனிடம் சரணடைந்து நற்கதியடைய நம்மையும் அழைக்கிறார் ஆழ்வார்.

''ஓங்கி உலகு அளந்த உத்தமன் பேர்பாடி'', மாயனை வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க, பாடிப்பறை கொண்டு, தேவாதி தேவனைச் சேவித்தால், பகவத் நாம மகிமையை நாம் உணர முடியும். பகவான் உறையும் திவ்ய திருத்தலங்களின் பெருமையையும் நாம் அறிய முடியும். அழகிய சோலைகள் சூழ்ந்த, பூக்கள் நிறைந்த, வண்டுகள் மிகுந்த, புனித நதிக்கரையில் அமைந்துள்ள அர்ச்சா அவதார மூர்த்திகளை நம் கண்களால் கண்டுகளித்தால், பரம போக்யனான பகவானும் குன்றனைய குற்றம் செய்யினும் நம் குணம் கண்டு மகிழ்ந்து, நமக்கு நல்வழிகாட்டுவான். எப்படி நாம் பகவானிடம் சரணடைய வேண்டும்? சொல்லிக் கொடுக்கிறார் ஆழ்வார் (திருமாலை 29),

''ஊரிலேன் காணி இல்லை, உறவு
மற்றொருவர் இல்லை
பாரில் நின் பாத மூலம் பற்றிலேன் பரம மூர்த்தி!



*காரொளி வண்ணனே ! கண்ணனே !*
*கதறுகின்றேன்*
*ஆருளர் களைகண்? அம்மா! அரங்க மா*
*நகருளானே!"*

வேறு வழியின்றி, புகலற்று, உன்னையே கதி என்று, உன்னையே நம்பி உன் முன் நிற்கின்றேன். உன்னை விட்டால் யார் எனக்குக் கதி. என் துன்பங்களை நீக்கு. இப்படிச் சொல்லி சரணடைய வேண்டும். திரௌபதி சரண் அடைந்தாலே அப்படி. கஜேந்திரன் எனும் யானை ஆதிமூலமே என்று கூறி சரணடைந்ததே அப்படி. பிரகலாதன் முழு நம்பிக்கை உடன் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்து கொண்டே சரணடைந் தானே ! அப்படி. துருவன் அனைத்தும் விடுத்து பகவானே கதி என்று, நாரத முனி உபதேசத்துடன், சரணடைந்தானே! அப்படி சரணடைய வேண்டும் என்கிறார்.

"எனக்கு இனி கதி என் சொல்லாய், என்னுடை ஆளுடைய கோலே" என்று கதறி சரணடைய வேண்டுமாம். தன்னை மூர்க்கன் என்று சொல்லிக் கொண்டு, "மூர்க்கனேன் வந்து நின்றேன்" என்று புலம்பி நிற்கிறார். மனம் மொழி செயல் ஆகிய மூன்று நிலைகளிலும் பொய்யன் என்கிறார். "பொய்யனேன் பொய்யனேனே" என்று புலம்பி நிற்கிறார். செய்த தவறுகளை ஒப்புக்கொண்டு வெட்கத்துடன் தலை குனிந்து நின்றால், இனிமேல் தவறு செய்ய மாட்டேன் என்று உறுதி அளித்தால், பகவான் காப்பாற்றுவான் என்ற முழு நம்பிக்கையோடு பகவானை அணுகினால், பகவான் நம்மைக் காப்பாற்றுவான் என்பதே தொண்டரடிப்பொடி ஆழ்வார் நமக்குக் காட்டும் வழி. அடைய வேண்டியவனும் (உபேயம்), அடைய வேண்டிய வழி அல்லது மார்க்கமும் (உபாயம்) பகவானே என்ற நினைவோடு சரணடைய வேண்டும்.

துயரறு சுடரடிகள் நமக்குக் கிடைக்கும். இதுவே புருஷார்த்தம். அடையவிரும்பும் பொருள். பெறவிரும்பும் பொருள். இப்படிச் சரணடைந்தால் பகவானின் திருவுள்ளம் சந்தோஷப்படும். பகவான் நம்மை ஏற்றுக் கொள்வான். இதுவே தொண்டரடிப் பொடி ஆழ்வாரின் உபதேசம். எனவே சிற்றின்பத்தை அளிக்கும் புலன்களை அடக்கி, பேரின்ப வாழ்வை அளிக்கும் எம்பெருமான் திருநாமத்தைத் துதித்துச் சரணடைவோம்

## கண்ணன் கருத்துரை



*ஸமோ஽ஹம் ஸர்வபூதேஷு ந*
*மேனேவஷ்யோ஽ஸ்தி ந ப்ரிய: ।*
*யே பஜந்தி து மாம் பக்த்யா மயி தே*
*தேஷு சாப்யஹம் ॥* (9-29)

**உயிர்கள் அனைத்திலும் நான் சமமாக இருக்கிறேன். எனக்குப் பகைவனும் இல்லை; நண்பனும் இல்லை; எவன் ஒருவன் என்னை பக்தியோடு வழிபடுகிறனோ அவன் என்னுள் இருக்கிறான்; நானுங்கூட அவனுள் இருக்கிறேன்.**

தொகுப்பு:
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன், திருப்பதி.



அலசுவோம்...

அறிவோம்...

ஆதிகாவிய நாயகர்களை...



# இக்ஷ்வாகு குலகுரு "வசிஷ்டர்"

– திரு. எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்,
9486139685

முற்காலங்களில் குலகுரு, ராஜகுரு என்றெல்லாம் அழைக்கப்படும் ஆசாரியர்கள் ஓர் அரசனின் அவையில் மந்திரிகளைக் காட்டிலும் அதி முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக விளங்கினர்.

திரேதா யுகத்தின் நாயகனாகிய ஸ்ரீராமபிரான் அவதரித்த இக்ஷ்வாகு வம்சத்தின் குலகுருவாக விளங்கிய வசிஷ்டரும் தம்முடைய ஞானம், தவம் ஆகிய இரண்டு வகையிலும் அனைவராலும் மிகவும் மதிக்கப்பட்டவராக விளங்கினார்.

ஸ்ரீவிஷ்ணு சஹஸ்ர நாமத்தின் தொடக்கத்தில் வியாஸ பகவானைப் போற்றுகின்ற ஒரு சுலோகம் உள்ளது.

*''வ்யாஸம் வசிஷ்ட நப்தாரம் சக்தே: பௌத்ரம் அகல்மஷம்*

*பராசராத்மஜம் வந்தே சுகதாதம் தபோநிதிம்''*

என்ற அந்தச் சுலோகத்தின் மூலம் மகா பாரதத்தை அருளிய ஸ்ரீவியாஸ பகவானின் கொள்ளுத்தாத்தாவே ஸ்ரீவசிஷ்ட பகவான் என்பதை அறிந்து கொள்கின்றோம்.

அப்படிப்பட்ட வசிஷ்டரே பல்லாயிரக்கணக் கான வருடங்களாக ஸ்ரீராமபிரானின் முன்னோர்கள் முதற்கொண்டு ஸ்ரீராமாவதாரத்திற்குப் பிறகும் அவ்வரச பரம்பரையின் குலகுருவாக விளங்கி வந்தார்.


அதுமட்டுமா... மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்திரம் "ராம:" என்ற திருப்பெயரை ஸ்ரீராம பிரானுக்குச் சூட்டியவரே வசிஷ்டர்தாம். *''ரமயதி இதி ராம:''* "தன்னை தரிசிப்பவர்களை வசீகரித்து மகிழ்விப்பவன்" என்ற அற்புதமான பொருளைக் கொண்ட அந்தத் திருநாமம் நினைத்ததை முடிக்கும் ஒரு மந்திரச் சொல்லாகவும் விளங்குகின்றது.

"ராம:" என்ற சொல்லை அனுமன் ஒவ்வொரு கல்லின் மீதும் எழுதிக் கொடுக்க, அவற்றை வானரவீரர்கள் சுமந்து சென்று சமுத்திரத்தில் வீச, அக்கற்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டு மிதந்து மாபெரும் சேதுவாக (பாலமாக) உரு வெடுத்தது.

இராம நாம ஜபம் கொடுத்த மனவலிமை யால்தான் மகாத்மா காந்தியடிகள் வெள்ளையர் களிடமிருந்து நமது நாட்டிற்கு அகிம்சை வழியில் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தார்.

வடமொழியில் "ராம:" என்பதை நாம் தேனினும் இனிய தமிழ் மொழியில் "இராமன்" என்று கூறு கிறோம். பிரபஞ்சம் உள்ளவரையிலும் அழியாத புகழுடன் விளங்கப் போகின்ற எம்பெருமானின் திருநாமமாகிய "ராம:" என்கின்ற மந்திரச் சொல்லை நமக்கெல்லாம் வழங்கி அருள் செய்த வசிஷ்ட பகவானை கொண்டாடினாலும் தகும்.

க்ஷத்திரிய குலத்தில் பிறந்த விசுவாமித்திரரின் படைபலம் அனைத்தையும் தம்முடைய தவவலிமையால் வசிஷ்டர் தவிடுபொடியாக்கி



யதுடன், அவ்விசுவாமித்திரரால் பிரயோகிக்கப் பட்ட பிரம்மாஸ்திரத்தையே செயலிழக்கச் செய்தார்.

இதன் விளைவாக, *''திக்பலம் க்ஷத்ரிய பலம் ப்ரஹ்ம தேஜோ பலம்''*(தவவலிமை பொருந்திய பிராம்மணரின் பலத்திற்கு எதிரில் க்ஷத்திரியர்களின் பலம் பயனற்றது) என்று விசுவாமித்திரர் அந்தக் கணமே தவம் புரியச் சென்று விட்டார்.

பல்வேறு தடைகளைக்கடந்து பல்லாயிரக்கணக் கான வருடங்கள் தவம் புரிந்த பின்னர், பிரம்மா, சிவபெருமான் உள்ளிட்டவர்கள் தோன்றி பிரம்மரிஷி பட்டத்தை வழங்கினாலும், தாம் பிரம்மரிஷி என்பதை வசிஷ்டர் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று வேண்டி, அதையும் சாதித்தார் விசுவாமித்திரர்.

*''வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி''* என்ற பழமொழி இப்புராண நிகழ்வை ஒட்டியே உருவானது. தற்காலத்திலும் ஒருவரது திறமையை அவரைவிட உயர்ந்த நிலையில் உள்ள மற்றொருவர் பாராட்டி அங்கீகரித்தால் அதனை “வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி” என்ற பழமொழியைக் கூறிச் சிலாகிப்பது வழக்கத்தில் உள்ளது.

திரிசங்கு என்ற மன்னனை மனித உடலோடு தேவருலகத்திற்கு அனுப்ப முயற்சித்தது, “உண்மையையே பேசுவது” என்ற விரதம் கொண்டு இருந்த அரிச்சந்திர மஹாராஜாவிற்குப் பற்பல நெருக்கடிகளைக் கொடுத்தது எனப் பலவிதங்க ளிலும் வசிஷ்டருடன் விசுவாமித்திரர் பகைமை பாராட்டியதுண்டு. ஆனாலும், ஸ்ரீராம பிரானை விசுவாமித்திரருடன் அனுப்ப தசரதர் தயங்கிய பொழுது அறிவுரை கூறி அவ்விதமே அனுப்பச் செய்தவர் வசிஷ்டரே. அவ்வாறு அனுப்பினால்தான் பிரம்மச்சாரியாக விசுவாமித்திரருடன் செல்லும் ஸ்ரீராமபிரான் சீதாராமனாக அயோத்திக்குத் திரும்பி வருவார் என்பதை தம் ஞானக்கண்களால் பார்த்தவர் அல்லவா நம் வசிஷ்ட பகவான்.

நிற்க.

ஒவ்வொரு மனிதனின் குணம், நடத்தை இவற்றை வடிவமைப்பதில் அவனுடைய தாய் தந்தை இருவருக்கும் உள்ளதைக் காட்டிலும் அதிகமான பங்கு குருவுக்கு உள்ளது. இவ்வகையில் ஸ்ரீராம பிரானுக்கு மட்டுமல்லாது அவருடன் அவதரித்த பரதன், லக்ஷ்மணன், சத்ருக்னன் ஆகியவர்களுக்கும் நல்லறிவையும், நல்லொழுக்கத்தையும் புகட்டியவர் வசிஷ்டரே.

சிவதனுஸை நாணேற்றுபவருக்கே தம்முடைய அருமை மகள் சீதையை மணமுடிப்பதாக ஜனக மஹாராஜர் வாக்களித்தார். ஆனால் ஸ்ரீராமபிரான் சிவதனுஸை முறித்தவுடன் அவர் சற்றே தயங்கினா ராம். ஸ்ரீராமபிரானுடைய தந்தையார் தசரத மஹா ராஜா பல மனைவியரைக் கொண்டவர் என்பதால், ஸ்ரீராமபிரானும் பல பெண்களை மணந்து கொள் வாரோ என்ற ஐயம் அவருக்கு இருந்ததால் அவ்வாறு தயங்கினாராம்.

உடனடியாக இதனைப் புரிந்து கொண்ட விசுவாமித்திரரும், “ஜனக மஹாராஜரே! ஸ்ரீராமன் தசரதரின் புதல்வனாக இருக்கலாம். ஆனால், அவனுக்கு நல்லொழுக்கங்களை போதித்து வளர்த்த வர் வசிஷ்டரல்லவா? ஆகவே, நீர் உம்முடைய மகளா கிய சீதையைத் தயக்கம் ஏதுமின்றி ஸ்ரீராமனுக்கு மணமுடியுங்கள்” என்று அறிவுரை கூற, ஜனகரும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தாராம்.

இத்தகைய பெருமைகள் வாய்ந்த வசிஷ்ட பகவான் ஸ்ரீமத்ராமாயணம் என்னும் அழகிய தங்க ஆபரணத்தை அலங்கரிக்கும் வைரக்கல்லாகவே விளங்குகின்றார்.

*தொடர்ந்து அலசுவோம்...*



# சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்

# காவிரிக்கரையில் கல் நாதஸ்வரம்

- படிமக்கலைஞர் ப.சரவணன்,
குடந்தை, 8610819456.

மகாமகத் தீர்த்தவாரி தலமான ஆதி கும்பேஸ்வரர் கோயிலில் உள்ள கற்றளி வடிக்கும் சிற்பியின் கை வண்ணத்தில் கவி இசைக்கும் கல் நாதஸ்வரமாகப் பிறந்து, இசை வாணர்களின் உயிர் காற்றுடன் கலந்து, இசையாக மலர்ந்து, பல கலைத் துறையினரின் கூட்டு முயற்சியின் கலாச்சார சங்கமமாக ரசிக்க வைக்கும் ராகங்களின் சுவடுகளை சுமந்து வ(த)ரும் கல் நாதஸ்வரம் கும்ப கோணத்தின் மற்றொரு சிறப்பு என்றால் அது மிகையாகாது.

## கல் நாதஸ்வரம்

ஆதி இசைக்கருவியான நாதஸ்வரம் செய்ய உகந்தது ஆச்சா மரமாகும். அதுவும் வைரம் பாய்ந்த பாறையைப் போன்ற இறுகிய தன்மையுடையதாக இருக்க வேண்டும். அப்படி உருவாகும் இம்மரத்தால் ஆன நாதஸ்வரம் சுமார் 600 கிராம் எடையுள்ளதாகும். ஆச்சா மரத்தால் ஆன நாதஸ்வரத்தைப் போல் சுமார் ஆறு மடங்கு (3,600 கி.கி.) எடை உடைய இந்தக் கல் நாதஸ்வரம் சுமார் இரண்டடி நீளமுடையது.

## வாசிப்பு சிறப்பு

கடந்த நூற்றாண்டில் கேரள மாநிலத்துக் கொச்சி மன்னர் கும்பகோணம் வந்திருந்தபோது கல் நாதஸ்வரத்தின் இனிய நாதத்தைக் கேட்க ஆசைப்பட்டார். ஆனால் அதனை வாசிக்க எவருமே முன்வந்திராத நிலையில், கும்பகோணத்தில் வாழ்ந்து வந்த பிரபல நாதஸ்வர வித்வான் சிவக்கொழுந்துப் பிள்ளை (1838–1911) தான் வாசிப்பதாக முன் வந்தார். அதற்குச் சன்மானமாக இரண்டு மரக்கால் அளவுக்குப் பணமும், ஒரு யானையும் வேண்டுமென நிபந்தனை விதிக்க, அதனை கொச்சி மன்னர் ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து அந்தக் கல் நாதஸ்வரத்தை, சுமார் நாற்பத்தைந்து நிமிடம் அற்புதமாக வாசித்து, மாபெரும் சாதனை நிகழ்த்தினார் என்பது கடந்த கால கல் நாதஸ்வர புகழுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.



கும்பகோணம் ஆதிகும்பேஸ்வர ஸ்வாமி ஆலயத் தூண் ஒன்றில் கல் நாதஸ்வரம் கருவி வாசிக்கும் கலைஞர்களின் புடைப்பு சிற்பங்கள்

அதன் பின்னர் குடந்தையில் நாதஸ்வர மேதை கும்பகோணம் பக்கிரி சாமி பிள்ளை மற்றும் நாதஸ்வர வித்வான் குஞ்சுபாதம் பிள்ளை, அவருக்குப் பின் 2022 வரை நாதஸ்வர வித்வான் சுவாமிநாதப் பிள்ளை ஆகியோர் இக்கல் நாதஸ்வரத்தை வாசித்து உள்ளார்கள்.

இக்கல் நாதஸ்வரத்தில் 6 ஸ்வரங்கள் மட்டுமே இருக்கும். அதனால் சண்முகப் பிரியா ராகத்தில் விளையாட இது நேரமா எனும் கீர்த்தனையும், கல்யாணி போன்ற பிரதி மத்திம ராகங்கள் மட்டுமே வாசிக்க முடியும். இதில் மூன்று முதல் மூன்றரை கட்டை சுதியில் மட்டுமே வாசிக்க இயலும். முழுமையாகவும்

அடர்த்தியாகவும் மூச்சை உள்ளே செலுத்தினால் மட்டுமே இதில் நல் இசை கிடைக்கும் எனவும், பயிற்சி இருந்தால் மட்டுமே இதை வாசிக்க முடியும் என்றும் மேற்படி சுவாமிநாதப் பிள்ளை தெரிவித்து உள்ளார்.


கடந்த 2017ஆம் ஆண்டு செப்டம்பர் 29ஆம் தேதி ஆயுத பூஜை தினத்தன்று அன்றைய திருக்கோயில் செயல் அலுவலர் திருமதி கவிதா அவர்களின் பெரும் முயற்சியின் காரணமாக பெட்டகத்தில் இருந்த கல்நாதஸ்வரம் வெளியில் எடுக்கப்பட்டு வாசிக்கப்பட்டது. அதன் பின்னர் இன்று வரை இக்கல் நாதஸ்வரத்தின் நாத ஒலி ஒலிக்கவில்லை. அது மீண்டும் ஒலிக்க வேண்டும் என ஏக்கத்துடன் காத்திருக்கும் கலை ரசிகப் பெருமக்கள்!



இது வட இந்தியக் குழல் இசைக்கருவியான ஷெனாய் மாதிரியான அமைப்புடையதாகும். இதன் முகப்பில் உள்ள முக்கிய பாகமான சீவாளி, காவிரிக்கரையில் விளையும் ஒரு நாணல் புல்லில் செய்யப்படுகிறது.

இந்திய அஞ்சலகத் துறை சார்பில் கடந்த 10–6–2018 அன்று இக்கல் நாதஸ்வரம் சிறப்பை உலகுக்கு உணர்த்தும் வண்ணம் அன்றைய கும்பகோணம் துணை ஆட்சியர் திரு.எம்.பிரிதீப்குமார் ஐ.ஏ.எஸ். அவர்களின் திருக்கரங்களால் சிறப்பு அஞ்சலகக் கவர் வெளியிடப்பட்டது.

## நினைத்ததும் வருவான்



*நினைத்ததும் வருவான் நினைத்ததைத் தருவான்*
*நிர்மல ரூபன் ஹனுமான்.*
*நேரமும் காலமும் எல்லாம் நன்றாய்*
*மாற்றியே அமைப்பவன் ஹனுமான்.*

*வேண்டுதல் தன்னை விரும்பியே தந்து*
*வெற்றிலை மாலை அணிவான்.*
*நாடிடும் அன்பர் உள்ளம் நிறைந்து*
*நலமே தருவான் ஹனுமான்.*

*அன்புடன் துளசி மாலை அணிந்து*
*ராமனின் புகழை இசைப்பான்.*
*அல்லும் பகலும் எல்லாம் அவனே*
*என்றே தினமும் உரைப்பான்.*

*ஆயிரத்தெட்டு சுற்றினில் ஹனுமான்*
*அகமே மிகவும் மகிழ்வான்.*
*வெண்ணெய்க் காப்பினை மகிழ்வாய் ஏற்று*
*வேதனை தீர்த்தே மகிழ்வான்.*

**– திரு.எம்.வி.குமார், மதுராந்தகம்.**



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஜனவரி 2024

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## பிப்ரவரி 2024

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | | |

## மார்ச் 2024

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |



### ஜனவரி 2024

01 ஆங்கில வருட பிறப்பு
07–13 ஆண்டாள் நீராட்டோத்ஸவம்
09 தொண்டரடிப்பொடியாழ்வார் திருநட்.
14 போகி, 15 மகர சங்கராந்தி–பொங்கல்
16 மாட்டுப்பொங்கல், ஆண்டாள் பரிணயோத்ஸவம்
25 ஸ்ரீராமகிருஷ்ண தீர்த்த முக்கோட்டி
26 இந்தியக் குடியரசு தினம்
28 திருமழிசையாழ்வார் திருநட்சத்திரம்


### பிப்ரவரி 2024

09 ஸ்ரீபுரந்தரதாசர் ஆராதனை
10–18 தேவுனிகடப ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
16 இரத சப்தமி, பீஷ்மாஷ்டமி, 20 பீஷ்ம ஏகாதசி
21 குலசேகராழ்வார் திருநட்சத்திரம்
17–23 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி தெப்போத்ஸவம்
29–...8 ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

### மார்ச் 2024

01–10 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
08 மஹாசிவராத்ரி
09 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி திருக்கல்யாணம்
17–25 தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
20–24 திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம்
25 ஸ்ரீலக்ஷ்மி ஜெயந்தி, தும்புரு தீர்த்த முக்கோட்டி
23–27 சூரியப்பூஜையை முன்னிட்டு நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி தெப்போத்ஸவம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்



## ஏப்ரல் 2024

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

## மே 2024

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## ஜூன் 2024

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

### ஏப்ரல் 2024

5-13 திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
09 தெலுங்கு வருட பிறப்பு (க்ரோதி நாமம்)
12-20 வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
14 தமிழ் வருட பிறப்பு, 17 ஸ்ரீராமநவமி
17-25 ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
21-23 திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம்
23-மே1 நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயணஸ்வாமி பிரம்மோத்ஸவம்

### மே 2024

10 பரசுராம ஜெயந்தி, அக்ஷய திருதியை
12 இராமாநுஜ ஜெயந்தி, சங்கர ஜெயந்தி
14 திருப்பதி ஸ்ரீகங்கை அம்மன் சித்திரைத் திருவிழா
16-24 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
17-19 திருமலை ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயம்
21-29 ரிஷிகேஷ்/நாராயணவனம் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
20-23 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம்
22 ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி, தரிகொண்ட வெங்கமாம்ப ஜெயந்தி, 23 ஸ்ரீகூர்ம ஜெயந்தி,அன்னமய்யா ஜெயந்தி

### ஜூன் 2024

01 ஹனுமத் ஜெயந்தி
02 கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி கருட சேவை
16-25 அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
17-21 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம்
19-21 திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்
27-29 திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதாரோத்ஸவம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்



## ஜுலை 2024

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## ஆகஸ்ட் 2024

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## செப்டம்பர் 2024

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

### ஜுலை 2024

7 பூரி ஜெகந்நாத ஸ்வாமி ரதயாத்திரை
10–12 ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார மஹோத்ஸவம்
16 திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம்
16–18 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்
17–20 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
21 ஆஷாட பௌர்ணமி,வியாச ஜெயந்தி, குருபௌர்ணமி

### ஆகஸ்ட் 2024

04 ஸ்ரீசக்ரத்தாழ்வார் திருநட்சத்திரம்
07 ஆண்டாள் திருவாடிப்பூரம், 08 நாகசதுர்த்தி
09 கருட பஞ்சமி, 10 கல்கி ஜெயந்தி,
13 மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா நினைவு தினம்
14–17 திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
15 இந்திய சுதந்திர தினம், 16 வரலக்ஷ்மி விரதம்
19 ஸ்ரீவிகனச ஜெயந்தி, ஹயக்ரீவ ஜெயந்தி
20 காயத்ரி ஜபம், 26 ஸ்ரீகிருஷ்ண ஜென்மாஷ்டமி
27 கோகுலாஷ்டமி

### செப்டம்பர் 2024

05 ஸ்ரீவராஹ ஜெயந்தி, ஸ்ரீபலராம ஜெயந்தி
07 விநாயக சதுர்த்தி, 08 ரிஷி பஞ்சமி
13–14 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
15 ஸ்ரீவாமன ஜெயந்தி
15–18 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பவித்ரோத்ஸவம்
17 அனந்த பத்மநாப ஸ்வாமி விரதம்
18 மஹாளய பக்ஷம் ஆரம்பம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்



## அக்டோபர் 2024

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## நவம்பர் 2024

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## டிசம்பர் 2024

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### அக்டோபர் 2024

02 காந்தி ஜெயந்தி
04–12 திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவம், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் நவராத்ரி உத்ஸவம்
08 திருமலையப்ப ஸ்வாமி கருட சேவை
09 சரஸ்வதி பூஜை
11 துர்காஷ்டமி
12 மஹாநவமி, விஜய தசமி
31 நரக சதுர்தசி, தீபாவளி அமாவாசை

### நவம்பர் 2024

01 ஸ்ரீகேதார கௌரி விரதம்
05 நாகுல சதுர்த்தி
09 திருமலையப்ப ஸ்வாமி புஷ்பயாகம்
13 கைசிக துவாதசி
15 கார்த்திகை தீபோத்ஸவம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் அன்னாபிஷேகம்
28–டி.6 திருச். ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்ம உத்ஸவம் 28 தன்வந்தரி ஜெயந்தி

### டிசம்பர் 2024

02 திருச்.ஸ்ரீபத்மாவதி தாயார் யானை வாகனம்
06 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பஞ்சமி தீர்த்தம்
07 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் புஷ்ப யாகம்
11 ஸ்ரீகீதா ஜெயந்தி, 13 ஸ்ரீஅனுமத் விரதம்
13 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி கார்த்திகை தீபோத்ஸவம்
16 மார்கழி மாதம் ஆரம்பம்



# நீங்காத செல்வம் நிறைந்த பொங்கல்

திருமதி. ராஜலக்ஷ்மி, கேரளா, 98843 47886.

பொங்கல் திருவிழாவையும், தமிழகத்தின் வளத்தையும் திருப்பாவை, புறநானூறு, பரிபாடல், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை எனச் சங்க இலக்கியங்களில் காண முடிகிறது. இதன் மூலம், சங்க காலத்திலிருந்தே பொங்கல் பண்டிகை சிறப்புடன் கொண்டாடப்பட்டு வந்ததையும், தமிழகம் வளமோடு இருந்ததையும் நாம் அறிய முடியும்.

மார்கழி முடிந்து தை மாதத்தை மிகவும் சிறப்பு மிக்கதாக்குவது பொங்கல் திருநாளாகும். இதை சனாதன தர்மத்தில் பல விதத்தில் கொண்டாடுகிறார்கள். ஒவ்வொரு மாநிலமும், இதை அவர்கள் வழிபாட்டிற்குரிய பண்டைய விதிகளைப் பின்பற்றிக் கொண்டாடுவார்கள். “தைப்பொங்கல்” என்பது தமிழருக்கு உரியது. இதை போகி, தைப்பொங்கல், மாட்டுப் பொங்கல் மற்றும் காணும் பொங்கல் என்று கொண்டாடுகிறார்கள். நம் பண்டைத் தமிழர்கள் அனைத்து உயிரினங்களும் வளமுடன் வாழ லோக சாக்ஷியாக நம் கண் முன்னே தோன்றும் கதிரவனை வழிபடுகிறார்கள். கதிரவன் வழிபாடு உலகில் உள்ள முக்கிய தொன்மையான வழிபாடாகும். கதிரவன் இல்லை என்றால் நம்மால் இப்பூவுலகில் வாழ இயலாது. அவர் நம் கண்ணெதிரே தோன்றி வாழ வைக்கும் கண்கண்ட தெய்வமாவார்.



போகி அன்று வீடுகளைச் சுத்தம் செய்து, சுண்ணம் அடித்து, பழைய பொருட்களை எரிப்பார்கள். இது, கிராமப் புறங்களில் மட்டுமல்லாமல், நகர்ப்புறங்களிலும் இவ்வாறு செய்வதை நாம் காண்கிறோம். ஆனால், நாம் எரிக்கும்போது, மக்கும் (பிளாஸ்டிக் போன்றவற்றைத் தவிர்த்து) குப்பைகள் மட்டுமே தீயில் இட வேண்டும். பின்னர், அதை வலம் வந்து, மேள தாளம் இசைப்பர். சிலர் பருப்பு போலி, இனிப்பு வகைகள் செய்வார்கள். இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது, நாம் எப்பொழுதும் நம்மிடத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளல் வேண்டும். மனதில் இருக்கும் தீய எண்ணங்களையும், தீய பண்புகளையும் தீயில் இட்டு சுட்டெரிப்பது போல் அழித்தல் வேண்டும். அதுமட்டுமல்லாமல், நம் வாழ்வில் இதுவரை நடந்த இழப்பு, சோகம் போன்ற நிகழ்வுகளையும் மறக்க முயற்சிக்க வேண்டும் என்பதாகும்.

தைப்பொங்கல் அன்று புத்தாடை அணிந்து, கிராமப் புறங்களில் வீட்டிற்கு வெளியிலோ அல்லது வீட்டிற்கு உள்ளேயோ பொங்கல் வைப்பர். அடுப்பை நன்றாக மெழுகி, கோலமிட்டு, மஞ்சள் குங்குமம் வைத்து, பொங்கல் பானை, மஞ்சள் கிழங்கு, கரும்பு, பூ போன்ற வற்றை வைத்து, திருநீரோ, குங்குமமோ, திருநாமமோ இட்டு, அதில் அரிசி, நெய், வெல்லம், பால் என்று அவரவர் குல வழக்கப்படி பொங்கல் செய்வதும் உண்டு. இதற்கு முன்னதாக, பூஜை அறையைச் சுத்தம் செய்து, கோலம் இட்டு, பூ வைத்து,

**பொங்கல் திருநாள் நமக்கு என்னவெல்லாம் கற்றுக் கொடுக்கிறது என்பதைக் காண்போம்**

- அனைத்து உயிரினங்களையும் போற்றி அவற்றோடு ஒன்றிணைந்து வாழ்தல் வேண்டும்.
- இயற்கையைப் பாதுகாத்தல் வேண்டும்.
- நம்மைச் சுற்றி இருக்கும் இடங்களைத் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும்.
- நம்மைச் சுற்றி இருப்பவர்களோடு நட்புடன் பழகுதல் வேண்டும்.
- இறைவனின் வரப்பிரசாதமான இயற்கை ரசிக்கவேயன்றி அழிப்பதற்கல்ல என்பதைத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.
- வேளாண்மைக்கு முக்கியத்துவமும், உழவர்களை மதித்தும், இயற்கையுடன் ஒன்றி வாழப் பழக வேண்டும்.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பாக விளங்கப் பாடுபட வேண்டும்.
- இயற்கை நமக்குப் பலவிதத்தில் பயன் அளிக்கிறது என்பதையும், அதனால் அதை நாம் பாதுகாக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து, நம் சந்ததியினருக்கும் தெரிய படுத்துதல் வேண்டும்.
- இயற்கையை நாம் பாதுகாத்தால், இயற்கை நம் வருங்கால சந்ததிகளுக்கு நல்வாழ்வை அளிக்கும் என்று உணர வேண்டும்.
- சனாதன தர்மத்தில் உள்ள பண்டிகைகளைக் கொண்டாடி னாலே போதும், அதில் உள்ள விதிமுறைகள் நமக்கான நல்வாழ்க்கை முறையைப் பற்றிக் கூறியிருப்பதை அறிய முடியும். அதனால் நாமும், நம் வருங்காலத் தலைமுறையும் செழித்து வாழ முடியும் என்பது திண்ணம்.
- நம் முன்னோர்களான ரிஷிகள், நல்லரசர்கள், ஆசாரியர்கள் என எல்லோரும் வருங்காலத்து நன்மைக்காக இவ்வாறு பண்டிகைகள் மூலம் நம்மை அறியாமலே நமக்கு நல்லதைக் காட்டி வருகிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.







விளக்கேற்றி வழிபட வேண்டும். வீட்டில் மாவிலைத் தோரணம், மஞ்சள் குங்குமமிட்டு அலங்கரிப்பர்.

பின்னர், பொங்கலை இறைவனுக்கும், சூரிய தேவனுக்கும் படைப்பார்கள். பொங்கல் பானையில் இருந்து பொங்கி வரும்போது, “பொங்கலோ பொங்கல்” என்று நாம் கூவ, வீட்டிலும் வாழ்விலும் அஷ்ட ஐச்வர்யம் பெருகும் என்பதாகும்.

பொங்கல் அன்று, பெண்கள் மஞ்சள் தேய்த்துக் குளிக்க வேண்டும். இதனால், நம் உடல், மனம், உள்ளம் தூய்மை அடைகிறது. கரும்பு கடித்து உண்பதால் பல் உறுதியும், தூய்மையும் ஆகிறது. நாம் பொங்கலிட தீ மூட்டுவதால், அக்னி தேவனின் அருள் பெறுகிறோம். அக்னி செல்வத்தைக் கொடுப்பவன் என்றும் கூறுவர்.

இவ்வாறு செல்வம், ஆரோக்கியம், ஆயுள் என மூன்றும் கிட்டுவதால் பொங்கல் மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். குடும்பத்தோடு பொங்கலிட்டு இறைவனைத் துதிப்பதால் நம் முன்னோர்களின் அருளும் மற்றும் குடும்பத்தின் முக்கியத்துவத்தை யும் நாம் உணர்கிறோம்.

மாட்டுப் பொங்கல் நம்மைச் சுற்றி இருக்கும் கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. கிராமப் புறங்களில் மாட்டுப் பொங்கலை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். நகர்ப்புறங்களில், நாம் இருக்கும் இடத்திற்கு அருகில் உள்ள "கோசாலை"க்குச் சென்று பசுக்களுக்கு உணவு அளித்து வழிபடலாம். பசுவிற்குள் அனைத்து தெய்வங்களும் வீற்றிருக்கிறார்கள் என்பது ஐதீகம். சில குடும்பத்தில் "கனு வைப்பது" என்கிற சம்பிரதாயத்தில், பல வகை வண்ணம் கலந்த சாதத்தை காக்கைக்குப் படைப்பார்கள். இதனால் "அண்ணன் தங்கை" உறவு மேம்படும் என்பது ஐதீகம். இதை அவரவர் குடும்ப வழக்கப்படி செய்வது நல்லது. மாடு வைத்திருப்பவர்கள் பசுவை குளிப்பாட்டி, கொம்புகளுக்கு வண்ணம் தீட்டி, பூ, மணி கட்டி நன்கு அலங்கரித்து வழிபடுவார்கள். நகர்ப் புறங்களில் "டும் டும் மாட்டுக்காரன்", வீட்டிற்கு பசும்பால் கொண்டு வருபவனின் கோசாலைகள், கோயிலில் உள்ள பசுக்கள், யானைகள் மற்றும் மயிலினங்கள் போன்றவற்றிற்கு நாம் உணவு, தானியம் அல்லது பணம் மூலமாக உதவி அளிக்கலாம். இந்தப் பண்டிகையால், நம்மைச் சுற்றி வாழும் அனைத்து உயிரினங்களுடன் இணைந்து வாழ ஒரு பழக்கம் ஏற்படுகிறது.

காணும் பொங்கல் என்பது கிராமப் புறத்தில், மாட்டு வண்டிகட்டி பல இயற்கை இடங்களை அடைந்து, "கட்டுச்சாதம்" எடுத்துச் சென்று, இயற்கையுடன் கலந்துண்டு மகிழ்வர். இதனால் இயற்கையின் அழகை இரசிக்க முடிகிறது. இயற்கை நமக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். இயற்கையால் நாம் எவ்வளவு நன்மை அடைகிறோம் என்பதையும் அறிய முடிகிறது. பிளாஸ்டிக் போன்ற குப்பைகளால்இயற்கையை மாசு படுத்துதல் கூடாது. இயற்கையைப் போற்றிப் பாதுகாத்தல் வேண்டும்.

பொங்கல் என்பது நம் வாழ்வில் செல்வம் பொங்குவதற்காக மட்டும் அல்ல. நாமும் நம்மை சார்ந்து வாழும் அனைத்து உயிர்களும், இயற்கையோடு நன்றாக ஒன்று கூடி வாழ வேண்டும் என்பதைக் காட்டுகிறது. "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்பதற்காகவே இந்தத் தைத்திருநாளை குடும்பத்துடன் சேர்ந்து கொண்டாடுவோம்.

வாசலில் சாணம் இட்டு மெழுகி, மாக்கோலம் இட்டு, மாவிலைத் தோரணம், வாழை, கரும்பு, மஞ்சள் கொடி கட்டி, தென்னங்கீற்றால் அலங்கரித்து, வீட்டையே லக்ஷ்மி கடாக்ஷம் நிறைந்ததாக மாற்றி, கும்மி, கோலாட்டம் ஆடிப்பாடி இறைவனைப் போற்றிப் பாசுரங்களைப் பாடி, இறைவனின் திருவருளைப் பெறலாம்.

மாட்டு வண்டி, உரி அடி, ஊஞ்சல் என விளையாட்டுகளில் பங்கெடுக்க வேண்டும். நகர வாசிகள் தங்கள் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் அனைவருடனும் சேர்ந்து கொண்டாடினால் மிக அழகாக இருக்கும். பொங்கல் திருவிழாவை ஆண்டாள் கூறியதைப் போல் நாமும் கூடியிருந்து கொண்டாட வேண்டும்.



மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்



சென்ற இதழின் தொடர்ச்சி...

சௌனகாதி முனிவர்களின் கேள்வி அறிவில் உள்ள நாட்டத்தை அறிந்து கொண்ட மகரிஷி, முனிவர்களே! வால்மீகி முனிவரின் வாயிலாக அறிந்த ஆத்மராமனின் கதையை இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லப்போகிறேன். இந்த வராக பர்வதத்தின் பெருமையை வார்த்தைகளால் சொல்ல முடியாதது. இதன் பெருமையை அறிந்து கொள்வதற்கு ஆத்மராமனின் கதை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஒருரில் ஓர் அந்தணன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் பெயர் ஆத்மராமன். அவன் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினான். எல்லோராலும் பண்டிதன் எனவும் போற்றப்பட்டான். தர்ம, கர்மங்களை நாள் தவறாமல் செய்து வந்தான். தெய்வ காரியங்களில் மிகவும் ஈடுபாடுடையவன். அந்தணர்களை மதிக்கும் பண்பும் அவனிடம் இருந்தது. அவனுடைய அறச்சிந்தனைக்கு அளவே இல்லை. முன்னோர்கள் உழைத்துச் சேர்த்து வைத்த பொருட்களைக் கொண்டே வாழ்ந்து வந்த அவன் பொருட்களெல்லாம் செலவழிந்து போக ஏழையானான். ஆத்மராமனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

நீண்ட காலமாகத் தான் தொடர்ந்து செய்து வந்த தெய்வ காரியங்கள் செய்ய முடியாமல் போனது. மேலும், அந்தணர்களுக்குச் செய்து வந்த பொருளுதவியும் தொடர முடியாமல் போனது. அவன் அங்கிருந்து புறப்பட்டுத் திருப்பதிக்கு வந்து சேர்ந்தான். ஏழுமலையான் வீற்றிருக்கும் ஏழுமலைகளான திருமலையின் அடிவாரத்தில் உள்ள கபில தீர்த்தத்தில் நீராடினான். பிறகு கபிலேஸ்வரரை வணங்கினான். அதன் பின்பு கபில தீர்த்தத்தை அடுத்துள்ள வனத்திற்குள் புகுந்து நடந்தான். அந்த மலையில் உள்ள தீர்த்தங்களில் நீராடி மெல்ல மெல்ல அம்மலையை நோக்கி முன்னேறினான். அந்த மலையில் குகையொன்றைக் கண்டான். அக்குகைக்குள் ஒரு முனிவர் தவம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தான். அவர்தான் சனத் குமாரர். மக்கள் நடமாட்டம் இல்லா இந்த இடத்தில் தவம் செய்து கொண்டிருந்த அவரைப்பார்த்து ஆத்மராமன் திகைத்து நின்றான். மகாத்மாக்களான தவசீலர்களைத் தரிசிப்பது புண்ணியச் செயல் என்பதை உணர்ந்து, அந்த முனிவரிடம் வந்து அவர் முன் தரையில் விழுந்து வணங்கினான். தன் முன் வீழ்ந்து வணங்கிய அவனை அருள் கூர்ந்த பார்வையில் பார்த்தார் அம்முனிவர்.

அந்த அருட் பார்வைக்கு ஆளான ஆத்மராமன்,தவசீலரே! மகாத்மா! கருணா மூர்த்தியே!என்னை தாங்கள் கருணை கொண்டு ஆசிர்வதிக்க வேண்டும். வறுமைக் காரணமாக வீட்டை விட்டு

வெளியேறினேன். என்ன செய்வது என்று புரியாமல் கால் போன போக்கில் திரிந்து கொண்டிருந்தேன். அப்பொழுது உங்கள் தரிசனம் எனக்குக் கிடைத்தது. இனி தாங்களே எனக்குக் கதி. என் நிலையைப் புரிந்து கொண்டு என்னை இந்தத் துன்ப நிலையில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று மிகவும் பணிவன்போடு வேண்டிக் கொண்டான். சனத்குமாரர் அவனுடைய வேண்டுகோளைச் செவிமடுத்தார்.

அவன் சொல்லிய வார்த்தைகளில் இருந்த உண்மையை உணர்ந்தார். ஆசிர்வதிக்க வேண்டும் என நினைத்தார். சரி; ஏன் வருத்தப் படுகிறாய். நீ செய்த பாவங்கள் எல்லாம் தீர்ந்து போகும் நேரம் வந்து விட்டது. கவலைப் படாதே. நீ செய்த பாவங்கள் என்னென்னவென்று நானே உனக்கு எடுத்துச் சொல்கிறேன். கேள்.

முற்பிறவியில் நீ ஒரு கருமியாக இருந்தாய். எவருக்கும் எதையும் கிள்ளியும் கொடுக்காதவன். அது மட்டும் அல்ல. இறைச்சிந்தனை அற்றவனாக வும் இருந்தாய். மேலும், துற்குணம் உடையவனாக விளங்கினாய். தானம் கொடுப்பவனுக்கும், தானம் பெற்றுக் கொள்பவனுக்கும் இடையில் வேண்டாத பிரச்சனைகளை உண்டாக்கி விடுவாய்.

நீ தூய்மையானவனா என்றால் அதுவும் இல்லை. ஒழுங்கீனமானவன். யார் எதைக் கொடுத்தாலும் ஆசாரத்தை ஒதுக்கி விட்டு அதை அப்படியே ஏற்றுக் கொள்வாய். பார்க்கின்றவர்கள் எல்லோரையும் ஏளனமாய் பார்ப்பதும், அவர்களை கேலி செய்து மகிழ்வதுமாய் இருந்தாய். உன் பண விஷயத்தில் மட்டும் மிகவும் எச்சரிக்கையாக இருப்பாய். இத்தனை பாவ காரியங்களால் உன் வாழ்க்கையே பொருளற்றுப் போயிற்று. இவ்வளவு இருந்தும் நீ கபில தீர்த்தத்தில் நீராடியதால் நீ செய்த பாவங்கள் எல்லாம் தீர்ந்து போய்விட்டது. இருந்தாலும் இது போதாது. மீண்டும் நீ செல்வந்தனாக வேண்டும் என்றால் அதற்கு ஒரே வழி "ஸ்ரீபத்மாலயக்ருபை"ப் பெறுவதே ஆகும்.

அக்கிருபையைப் பெற வேண்டுமானால் அது ஸ்ரீஹரியின் திருமார்பில் வாசம் செய்யும் வியூக லட்சுமியால் மட்டுமே முடியும். யார் அந்தத் தாய் என்று சிந்திக்கிறாயா? அந்தத் தாய் என்னுடைய கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பாளா? என்று ஐயம் கொள்கிறாயா?. உனக்கு அந்த அச்சம் வேண்டாம்.

அவளொரு கருணைக்கடல். உலகத்துக்கு எல்லாம் தாயாக விளங்குபவள். முழு நிலவைப் போன்று ஒளி பொருந்தியவள். தாமரையைத் திருக்கரங்களில் வைத்துக் கொண்டிருப்பவள். மிகவும் எளிமையான தவத்திற்கும் மனமிறங்கி அருள் செய்பவள். அவளைத் துதிப்பதற்கு மந்திரத்தை சொல்கிறேன். அதை இலட்சுமி மந்திரம் என்பார்கள்.

அந்த மந்திரத்தை மிகவும் பக்தியுடன் நாள் தோறும் சொல்லி துதித்து வந்தால் உன்னுடைய கோரிக்கைகள் நிறைவேறும் என்று விவரித்துக் கூறினார். நீ உடனே வேங்கடாசலத்திற்குச் செல். அங்கே சுவாமி ஸ்ரீநிவாசன் உன்னுடைய குறைகளை நிச்சயம் தீர்த்து வைப்பான் என்று சொல்லி அங்கிருந்து மறைந்தார்.

பிறகு சனத்குமாரரின் ஆணையின்படி ஆத்மராமன் வேங்கடாத்ரி மலையை நோக்கிப் பயணமானான். தொடர்ந்து லட்சுமி மந்திரத்தை துதித்துக் கொண்டு, தீர்த்தங்களில் நீராடி, இறுதியாக ஸ்வாமி புஷ்கரணியில் ஸ்ரீஹரியை நினைத்து நீராடினான். ஆத்மராமனின் பக்திக்கு மகிழ்ந்து ஸ்ரீஹரி அவன் முன் தோன்றினார். ஆத்மராமன் அவர் திருவடியில் வீழ்ந்து வணங்கினான்.

ஸ்வாமியை நேரில் தரிசித்த அவனுக்கு என்ன செய்வது எனப் புரியாமல் அப்படியே திகைத்து நின்றான். அவனுடைய நிலையை அறிந்த ஸ்வாமி, ஆத்மராமா அச்சம் கொள்ளாதே! அச்சம் எதற்கு? வியூக லக்ஷ்மியின் அருட்பார்வை உன் மேல் பட்டு விட்டது. ஆகையால் இனி நீ ஆயுள், ஆரோக்கிய சுகபாக்கியங்களோடு வாழ்வாயாக. உனக்கு அனைத்து நன்மைகளும் உண்டாகும் என வாழ்த்தி மறைந்தார்.

அதன்பிறகு வீடு திரும்பிய ஆத்மராமன் முன் போலவே தானதர்மங்கள் தொடர்ந்து செய்தும், அந்தணர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தும், எப்பொழுதும் இறைச் சிந்தனையோடும் அமைதியான வாழ்க்கை வாழ்ந்தான் என்று ஆத்ம ராமனின் கதையை சௌனகாதி முனிவர்களுக்குச்

சொல்லி முடித்தார் சூத மகரிஷி. மேலும், சில தீர்த்தங்களின் பெருமைகளையும் எடுத்துக் கூறினார்.

முனிவர்களே! வேங்கடாத்ரி துவாபர யுகத்திலேயே சிறப்புப் பெற்று விளங்கியது. குருக்ஷேத்திரம் யுத்தம் முடிவானவுடன் பலராமன் தான் எவருக்கும் துணையாக நிற்கப் போவதில்லை என அறிவித்து தீர்த்த யாத்திரை மேற்கொண்டார்.

எத்தனையோ தீர்த்தங்களில் நீராடிய பலராமன் முடிவாக வேங்கடாத்ரி சிகரத்தைக் கண்ட பின்பு அனைத்துத் தீர்த்தங்களிலும் நீராடிய பலனைத் தான் அடைந்ததாகக் கூறினார். அதுமட்டுமல்ல. பாண்டவர்கள் சூதில் தோற்று வனவாசம் செல்வதற்கு ஆயத்தமானபோது ஸ்ரீகிருஷ்ணர் அவர்களிடத்தில், பாண்டவ புத்திரர்களே! நீங்கள் மிகவும் வீரம் மிக்கவர்கள். புத்திசாலிகளும் கூட. ஆனாலும், உங்களுக்கு இந்த வனவாசம் என்பது உங்கள் வினைப்பயனே ஆகும். ஆனால், அதுவும் நன்மைக்கே. வனவாசத் திற்குப் பிறகு இந்த அஸ்தினாபுரம் உங்களுக்கே உரியதாகும். இதில் உங்களுக்கு ஐயம் வேண்டாம்.

நீங்கள் வனவாசத்தின்போது வேங்கடாத்ரிக்குச் செல்லுங்கள். அங்குள்ள தீர்த்தங்களில் நீராடி தவம் செய்து வாருங்கள். அதன் பலனாக உங்கள் பாவங்கள் எல்லாம் நசிந்து போகும். பின்பு நீங்கள் கௌரவர்களை மிகவும் எளிதாக வெற்றிக் கொள்ளலாம் என்று அறிவுரை கூறினார். ஸ்ரீகிருஷ்ணரின் அறிவுரைக்கு ஏற்ப வேங்கடாத்ரியில் ஒரு வருட காலம் தங்கியிருந்து தவம் செய்து வந்தபோது அவர்களுடைய தவத்தை மெச்சி சுவாமி வேங்கடவன் தர்மராஜாவின் கனவில் தோன்றி நடக்கவிருக்கும் நல்ல நிகழ்வுகளைச் சொல்லி ஆசிர்வதித்தார். பாண்டவர்களும் ஸ்ரீகிருஷ்ணரை மனதில் தியானித்தப்படி இருக்கின்ற காலத்தைக் கழிக்க முடிவு செய்தனர்.

முனிவர்களே! வேங்கடாத்ரியில் பாண்டவர்கள் நீராடிய தீர்த்தத்திற்கு பாண்டவ தீர்த்தம் என்று பெயர் உண்டானது. இப்பாண்டவ தீர்த்தம் போன்று பல சிறப்புகள் நிறைந்த தீர்த்தங்களும் வேங்கடாத்ரியில் உள்ளன. சாதாரண மனிதர்கள் மட்டுமல்ல முனிவர்கள் கூட அத்தீர்த்தங்களுக்கு எளிதில் செல்ல முடியாது. மகிமையுடைய வேங்கடாத்ரி மலையில் வீற்றிருக்கும் வேங்கடவனிடம் உறுதியான நம்பிக்கை கொண்டு அவரை சரணடைபவர்களுக்கு மட்டுமே இன்னல்கள் தீர்ந்து சுகம் உண்டாகும்.

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

*பெருமை அறிவோம்...*

# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*த்$_{3}$ருஷ்ட்வா ப்ரப$_{4}$ாதேஸத$_{2}$ ஸ புண்யகோடி விமாநமத்யந்த ஸமீபவர்த்தி ।*
*பீதோத$_{3}$கம் தம் வரத$_{3}$ம் விசிந்த்ய ராமாநுஜார்யோஸப்ய திவிஸ்மிதோஸபூ$_{4}$த் ॥*
**(27)**



**விடியற்காலை வேளையான அப்போது அத்திகிரியின் புண்யகோடி விமானம் மிக அருகில் தெரிவதைக் கண்டு, நீர் பருகியவன் பேரருளாளனே என்று அறுதியிட்டு இராமாநுஜர் பேராச்சரியமடைந்தார்.**

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

**புராண வரலாறு :**

ஒரு காலத்தில் சிவனும், பார்வதியும் சொக்கட்டான் ஆடியபோது, அதில் பார்வதி தோற்றுப் போனாள். வெற்றி பெற்ற சிவபிரான், பெருஞ்சிரிப்போடு, அவ்வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்தார். உடனே பார்வதி, சிவபெருமானின் வடிவத்தையும், இருப்பிடத்தையும், தொழிலையும், விளையாட்டுப் பேச்சாகக் கேலி செய்தாள். சிவபெருமான் உமையவளின் பேரழகு அவளைவிட்டு நீங்குமாறு சபிக்கவும், தவற்றை உணர்ந்த பார்வதி சாபத்தை நீக்கி அருளுமாறு வேண்டவே, காஞ்சியில் வாமன மூர்த்தியை வழிபட்டுச் சாபத்தை நீக்கிக் கொள்ளுமாறு சிவபெருமான் கூறவும், காஞ்சியைத் தன் மைந்தர்களுடன் உமையவள் அடைந்து, காம கோட்டத்தில், பஞ்ச தீர்த்தக் கரையில் நீராடி, ஒற்றைக்காலில் நின்று தவம் செய்தாள்.

பகவான் அங்கே தோன்றி உமையவளை நோக்கி, "நீ இவ்விடத்திலேயே, சிவபெருமானை நோக்கித் தவம் செய்தால், இழந்த பேரழகை மீண்டும் பெற்று, சிவபெருமானை மீண்டும் மணந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்படும்" என்று அருள, பார்வதி காஞ்சி காமகோட்டத்தில் மணலால் சிவலிங்கம் அமைத்து வழிபட்டுத் தவம் செய்தாள். விண்ணில் இருந்து சிவன் வெளியிட்ட வெப்பம், தவம் செய்யும் உமையவளைப் பெரிதும் தாக்கவே, மீண்டும் பகவான் அருளால் ஒரு மாமரம் கப்பும் கிளைகளுமாய் உமையவளுக்கு நிழல் தரத் தோன்றுகிறது. சிவபிரானும் தனது நெற்றிக்கண்ணால் மாமரத்தை எரிக்கவும், உமையவள் பகவானைச் சரண் அடைய, எம்பெருமான் சந்திரன் போன்ற குளிர்ச்சி ததும்பும் திருமுகத்துடன் சங்கு சக்கரங்களை ஏந்தித்தோன்றி தனது அருள் அமுதத்தைப் பொழிந்து, எரிந்து போன மாமரத்தை மீண்டும் தழைத்து வளரச் செய்து, உமையவளின் தவம் முற்றுப் பெறுமாறு செய்தார். பார்வதி சந்திர புஷ்கரணியில் நீராடி எழுந்தாள்.

சிவபிரான் பார்வதிக்குக் கொடுத்த சோதனைகளை, நிலவு ஒளியாகிய அமுதத்தை பொழிந்து, துண்டித்த (நீக்கிய) காரணத்தால், இவ்வூர் பெருமான், நிலாத்திங்கள் துண்டத் தான் என்று அழைக்கப் படுகிறான். காய்ந்து போன மா மரத்தைத் துளிர்க்கச் செய்ததால், "ஏகாம்பர வரதர்" என்ற பெயரும் அமைந்தது. உமையவளும் சிவ பெருமானை அடை கிறாள். இழந்த அழகைப் பெற்ற பார்வதி தேவி காமாக்ஷியானாள்.


**சிறப்புகள் :**

நாராயணனே பரம்பொருள் என்பதாக பாரத நிகழ்ச்சி உள்ளது. அருச்சுனனை நோக்கி சிவனுக்குச் செய்ய வேண்டிய வழிபாட்டைத் தன் திருவடிகளில் செய்யு மாறு கண்ணன் ஆணை



# நிலாத்திங்கள் துண்டத்தான் (பெரிய காஞ்சிபுரம்)

– உருப்பட்டூர்
சௌந்தரராஜன்,
சென்னை.



இட, அதனை ஏற்ற அர்ஜுனன், கண்ணனின் திருவடிகளை மலரால் அர்ச்சித்துப் பின்பு கைலாயம் சென்றபோது, அங்கே அம்மலர்களை சிவபெருமானின் திருமுடியில் கண்டதாகக் கூறுவாராய்,

*"நின் அடிப்பூ, பாண்டரங்கம் ஆடி, படர்சடை மேல் தீண்டி, கலாத்திங்கள் துண்டத்தின் மீது இருப்பக் கண்டு"* என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

*"தீர்த்தன் உலகு அளந்த சேவடிமேல் பூந்தாமம், சேர்த்தி அவையே சிவன் முடிமேல் தான் கண்டு"* என்று நம்மாழ்வாரும் அருளிச் செய்துள்ளார்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | நிலாத் திங்கள் துண்டத்தான், சந்திர குடப்பெருமாள் (மேற்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) |
| தாயார் | : | நேர் ஒருவர் இல்லா வல்லித் தாயார், நிலாத் திங்கள் துண்டத்தாயார். |
| தீர்த்தம் | : | சந்திர தீர்த்தம். |
| விமானம் | : | புருஷ சூக்த விமானம். சூரிய விமானம். |
| ப்ரத்யக்ஷம் | : | சிவபிரான், பார்வதி. |
| ஆகமம் | : | ஏகாம்பரேச்வரர் கோயிலின் உள்ளே எழுந்தருளி சிவாச் சாரியார்களின் ஆராதனையில் இப்பெருமான் இருப்பதால், வைணவ ஆகமங்களின் வழிபாடு இங்கு இல்லை. |
| மங்களாசாஸனம் | : | திருமங்கை ஆழ்வார். |
| விசேஷம் | : | நூற்றெட்டுத் திவ்ய தேசங்களில், சிவன் கோயிலின் உள்ளே, சைவர்களால் வழிபடப் பெறும் பெருமான். |

நிலவாகிய ஒளியைப் பொழிந்து, தன்னை வழிபட்ட உமையவளின் துன்பத்தைத் துண்டித்ததால் (நீக்கியதால்) இப்பெயர் அமைந்தது என்பர். காஞ்சி காமகோட்டத்தில் விளங்கும் காமாக்ஷிக்கு கண் அழகு அருளிய பெருமான் இவர் என்பர். தூய தமிழில் அமைந்த திருப்பெயரைத் தாயார் கொண்டு உள்ளார். ஆழ்வார்அருளிச் செய்த திருப் பெயரையே இத்தலத்து எம்பெருமான் கொண்டு உள்ளார்.

திவ்யதேச வாழ்த்துப் பாசுரம்.

*"துச்சம் இலாச் சங்கத் தொண்டர்க்கு*
*இன்புறவே கோளரியாய் எழுவில் தோன்றி*
*அச்சம் இலாத்துங்கத்து அண்டர்க்கு*
*அந்தகனாம் ஆடகனார் உரமேகீறிப்*
*பிச்சை துங்கைத் தண்டைச் செங்கழலால்*
*பீடுறவே நலனாய் ஓங்கும்*
*கச்சி நிலாத் திங்கள் துண்டத்து எம்பெருமானார்*
*பூம்பொற் கழல்கள் வாழி"*

**த்யானச்லோகம் :**

*காஞ்சீக்யாத மஹாபுரேது சுபதே ஸ்ரீசக்ர*
*தீர்த்தாச்ரயே*
*பாஸ்வத் ஸூர்ய விமாநபூஷண மணி: பச்சாந்*
*முகோ பாஸ்வர: ।*
*ப்ரத்யக்ஷா கிரிஜாபதேர் ஜலதிஜா நிஸ்துல்ய*
*ரூபாபிதா*
*நாம்நாதத்ரஹி சந்த்ரிகா சசி முகோ தேவோத்ய*
*வித்யோ ததே ॥*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

(திருமங்கையாழ்வார் – திருநீரகம் திவ்ய தேசத்தில் பார்க்க), ஸ்ரீபெரிய வாச்சான் பிள்ளை "வெப்பத்தால் வருந்துவோர்க்கு, அத்துன்பத்தை நீக்கி, தன் நிலவொளியால் இன்பத்தைக் கொடுக்கும் சந்திரனைப்போன்ற இயல்பினை உடைய காரணத்தால், எம்பெருமானுக்கு இப்பெயர் அமைந்தது" என்கிறார்.

*"மீண்டும் தெளியார்கள் மேதினியோர், நின்*
*அடிப்பூப்*
*பாண்டரங்கம் ஆடி படர்சடைமேல் - தீண்டிக்*
*கலாத் திங்கள் துண்டத்தின் மீது இருப்பக்கண்டு*
*நிலாத்திங்கள் துண்டத்தானே"*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

*761. ஓம் ஸத்ய மேதா: நம:*

அவதாரங்களில் நடப்பவை உண்மையே என்று காட்டுபவன்.

*ஓம் பிங்களா: நம:*

பெருமானின் திருமேனியில் மயில் கழுத்து சாயை ஒளியைச் சேர்ப்பவள்.

*762. ஓம் தராதர: நம:*

கோவர்த்தன மலையைத் தரித்தவன்.

*ஓம் ஸ்வஸ்தா: நம:*

தனக்குத்தானே ஆதாரமாக உள்ளவள்.

763. *ஓம் தேஜோவ்ருஷ: நம:*

பக்தர்களைக் காக்க சக்தியை அதிகமாகப் பயன்படுத்துபவன்.

*ஓம் பலாகீ: நம:*

சம்சாரக் கடலில் மீன்கள் போலுள்ள ஜீவாத்மாக்களை வைகுண்டத்தில் ஏற்றுபவள்.

764. *ஓம் த்யுதிதா: நம:*

திவ்ய சக்தியை உடையவன்.

*ஓம் கோஷ நந்தினீ நம:*

எல்லாக் கோஷங்களையும் கேட்டு மகிழ்பவள்.

765. *ஓம் ஸர்வஸஸ்த்ரப்ருதாம் வர: நம:*

ஆயுதங்கள் பயின்றவர்களில் சிறந்தவன்.

*ஓம் அஜிதா: நம:*

சிசுபாலன் முதலியோரின் தேசு அழித்த பகவானைத் தனதாக்கிக் கொண்டவள்.

766. *ஓம் ப்ரக்ரஹ: நம:*

பக்தர்களைத் தன் ஆணைப்படி நடத்துபவன்.

*ஓம் கர்ஷணீ: நம:*

பகவானையும் தனது மங்கள குணங்களால் ஆகர்ஷிப்பவள்.

767. *ஓம் நிக்ரஹ: நம:*

பகைவர்களை அடக்குபவன்.

*ஓம் நீதி: நம:*

குற்றவாளிகளையும், பகவான் ரக்ஷிக்கும்படி செய்பவள்.

768. *ஓம் வ்யக்ர: நம:*

அடியார்களின் விரோதிகளைத் தொலைப்பதில் பரபரப்பு உள்ளவன்.

*ஓம் கருடா: நம:*

ரோஷத்தை அடையாதவள்.

769. *ஓம் நைகஸ் ருங்க: நம:*

பகைவர்களை அழிக்கப் பல யுக்திகளைக் கையாளுபவன்.

*ஓம் கருடாஸநா: நம:*

கருடனான வேதஸ்வரூபத்தின் பொருளாய் இருப்பவள்.

770. *ஓம் கதாக்ரஜ: நம:*

"கதன்" என்கிற யாதவனுக்கு முன் பிறந்தவன்.

*ஓம் ஹ்லாதிநீ: நம:*

அனைவரையும் மகிழ்ச்சி அடையச் செய்பவள்.

*ஸ்ரீமதே சந்த்ரசூடாவல்லீ (நிலாத்திங்கள் துண்ட வல்லீ) நாயிகா ஸமேத ஸ்ரீஸுந்தரகலாஸ்வாமினே (நிலாத் திங்கள் துண்டத்தான்) பர ப்ரம்மணே நம:*

**குறிப்பு :**

காஞ்சிபுரத்தில் ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் திருச்சுற்றில் தனி சந்நிதியில் எழுந்தருளியுள்ளார்.

*திவ்யதேச வைபவம் வளரும்...*


**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.**

**திருப்பதி சுற்றுப்பகுதிகளில் உள்ள தி.தி.தே. ஆலய அமைவிடம் திருப்பதி ஆர்.டி.சி. பேருந்து நிலையத்திலிருந்து கி.மீ.களில்**

1) ஸ்ரீபத்மாவதி தாயார் திருக்கோயில், திருச்சானூர்...05 கி.மீ.
2) ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில், ஸ்ரீநிவாச மங்காபுரம்...12 கி.மீ.
3) ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருக்கோயில், திருப்பதி...01 கி.மீ.
4) ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி திருக்கோயில், திருப்பதி...2.3 கி.மீ.
5) ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி திருக்கோயில், திருப்பதி...03 கி.மீ.
6) ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில், அப்பளாய குண்டா...18 கி.மீ.
7) ஸ்ரீவேதவல்லி சமேத ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி திருக்கோயில், நாகுலாபுரம்...65 கி.மீ.
8) ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில், நாராயணவனம்...37 கி.மீ.
9) ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி திருக்கோயில், கார்வேடி நகரம்...48 கி.மீ.
10) ஸ்ரீகோதண்டராமர் திருக்கோயில், ஒண்டிமிட்டா, கடப்பா மாவட்டம்...116 கி.மீ.





# திருக்கச்சி நம்பிகள்

– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

"தொண்டை நாடு சான்றோர் உடைத்து" என்று புகழப்பட்ட தொண்டை நாட்டில் பூவிருந்தவல்லி என்னும் நகரில், வீரராகவர், கமலை என்னும் தம்பதிகளுக்குப் பிள்ளையாக மாசி மாதம் மிருகசீர்ஷ நக்ஷத்ரத்தில் அவதரித்தவர் திருக்கச்சி நம்பிகளாவர். பரம பதத்திலுள்ள சேனை முதலியாரே நம்பியாக அவதரித்தார் என்று கூறுவர். அதேபோல் சபரியின் அம்சம் என்றும் கூறுவர். ஞான பக்தி வைராக்யங்களால் நிறைந்த இவர், காஞ்சி பூர்ணர், கஜேந்த்ரதாஸர் என்று பல பெயர்களை உடையவர். இவர் தேவப்பெருமாள் விஷயமாக "தேவராஜ அஷ்டகம்" என்னும் ஸ்தோத்ரத்தை அருளினார்.

*மருவாரும் திருமல்லி வாழவந்தோன் வாழியே*
*மாசி ம்ருகசீரிடத்தில் வந்துதித்தோன் வாழியே*
*அருளாளருடன் மொழி சொல்ல திச யத்தோன் வாழியே*
*ஆறு மொழி பூதூரர்க்களித்த பிரான் வாழியே*
*திருவாலவட்டம் செய்து சேவிப்போன் வாழியே*
*தேவராசாட்டகத்தைச் செப்புமவன் வாழியே*
*தெருளாருமாளவந்தார் திருவடியோன் வாழியே*
*திருக்கச்சி நம்பி இரு திருவடிகள் வாழியே.*

**பதவுரை**

மரு – நறுமணம், வாரும் – வீசப்பெற்ற, திருமல்லி – பூந்தண்மல்லி என்னும் ஊரிலுள்ள அனைவரும், வாழ – சுகமாக வாழும்படி, வந்தோன் – அவதரித்தவர், வாழியே – வாழ்க. மாசி – மாசி மாதத்தில், ம்ருகசீரிடத்தில் – மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தில், வந்து – சேனை முதலியாராகி பரமபதத்தில் இருந்து வந்து, உதித்தான் – பூமியில் அவதரித்தவர், வாழியே –வாழ்க. அருளாளர் – பேரருளாளப் பெருமாள், உடன் – தம்முடனே, மொழிசொல் – வார்த்தை சொல்வதற்கு ஈடான, அதிசயத்தோன் – பெருமையுடையவர், வாழியே –வாழ்க. ஆறுமொழி – பேரருளாளர் அருளிய ஆறு வார்த்தைகளை, பூதூரர்க்கு – பெரும்பூதூர் மாமுனியான இராமாநுசமுனிக்கு. அளித்த – உபதேசித்த, பிரான் – உபகாரகர், வாழியே – வாழ்க. திருவாலவட்டம் செய்து – பேரருளாளனுக்கு விசிறி வீசி, சேவிப்போன் – தொண்டு செய்யுமவர், வாழியே – வாழ்க.

தேவராச அட்டகத்தை – பேரருளாளரைப் பற்றிய எட்டு சுலோகங்களடங்கிய துதி நூலொன்றை, செப்புமவன் – அருளிச் செய்யுமவர், வாழியே – வாழ்க, தெருள் ஆரும் – தெளிந்த அறிவு நிறைந்த, ஆளவந்தார் திருவடியோன் – ஆளவந்தாருடைய திருவடிகளை அடைந்தவர், வாழியே – வாழ்க. திருக்கச்சி நம்பி – திருக்கச்சி நம்பிகளின், இருதிருவடிகள் – இரண்டாய்ச் சேர்ந்த அழகிய திருவடிகள், வாழியே – வாழ்க. (பதவுரை அருளியவர் – கீர்த்தி மூர்த்தி திருப்பதி ஸ்ரீஉ.வே. திருமலை அனந்தாண் பிள்ளை கிருஷ்ணமாசார்ய சுவாமிகள்).



**திருக்கச்சி நம்பிகள் ஸ்ரீவரதராஜப் பெருமாளுக்கு செய்யும் ஆலவட்ட கைங்கர்ய திருக்காட்சி**

**சிறப்புரை**

(மருவாரும் திருமல்லி வாழ வந்தோன் வாழியே) மணம் நிறைந்த திருமல்லி என்னும் பூவிருந்தமல்லி. திருமல்லிக்கு மணமாவது "தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்கிற படியே சான்றோரான திருக்கச்சி நம்பிகள் அவதரித்ததேயாகும்.

மேலும், இந்நகரம் உலகில் புகழ் பெற்றதாய், எல்லா வயல்களோடும் கூடியதாய், பூந்தோட்டங்களால் மிக்க மணமும் அழகும் பெற்றதாகும். எப்போதும் பூத்த மல்லிகைக் கொடிகள் நிறைந்து விளங்குகையாலே பூவிருந்தமல்லி என்ற பெயர் ஏற்பட்டது. திருக்கச்சி நம்பியை "பூவிருந்தமல்லி வேந்தன்" என்றே புகழ்வர் பிள்ளைலோகம் சீயர் என்னும் ஆசாரியர்.

(மாசி ம்ருகசீரடத்தில் வந்துதித்தோன்) மாசி – தமிழ் வருடத்தில் பதினோராம் மாதம். இம்மாதத்தில் குலசேகராழ்வார் மற்றும் சில ஆசாரியர்கள் அவதரித்த பெருமையுடையதாகும். மிருகசீர்ஷம் நக்ஷத்திர வரிசையில் ஐந்தாவதாகும். *''கும்பே ம்ருகசிரோத்பூதம்...''* என்று இவருடைய தனியனில் கும்ப மாதமான மாசியில் மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தில் அவதரித்தவர் என்று காணலாம்.

(அருளாளருடன் மொழி சொல்லதிசயத்தோன்) திருவாலவட்டம் வீசி தேவப் பெருமாள் அருள் பெற்றதனால் தேவப்பெருமாள் அருளாளனானார். பூமாலை தொடுத்து புஷ்ப கைங்கர்யம் அருளாளனான தேவப்பெருமாளுக்கு தினமும் பூந்தமல்லியிலிருந்து காஞ்சி சென்று இந்த கைங்கர்யம் செய்து வந்தார். ஒரு நாள் தேவப் பெருமாள் புன்சிரிப்புடன் கூடிய முகத்தோடு நம்பியைப் பார்த்து, "குற்றமற்றவரே, நீர் இப்போது செய்யும் கைங்கர்யத்தை நான் மிகவும் உகந்தேன். பிரமனின் உத்தரவேதியிலே யாகாக்னியில் இருந்து தோன்றிய சோதிமயமான எனக்கு விளாமிச்சை வேரினால் விசிறியைக் கொண்டு என் ஸந்நிதியில் இடைவிடாமல் நீர் திருவாலவட்ட கைங்கர்யம் செய்ய வேண்டும்" என்று நியமித்தார். இவ்வாறு அருளாளர் முதன்முதலாக மொழிந்த அதிசய சொல்லை எண்ணி மகிழ்ந்து காஞ்சியிலேயே வாழ்ந்து வந்தவராவர். இது பற்றியே "மொழி சொல்லதிசயத்தோன்" என்றபடி.

*வாழித்திருநாம உரை தொடரும்....*

## *வைணவக்குறுக்கெழுத்துப்புதிர் 90க்கான விடைகள்*

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 த | ச | ர | த | ன் | | | 2 தி | வ | ஸ் | ர | 3 ச |
| ரு | | யா | சு | னு | 4 அ | 5 தி | ரு | ம | லை | | |
| 6 ம | ன் | 7 ம | 8 த | ன் | சு | ரு | 9 மா | ண் | ட | 10 வி | |
| ர் | தி | து | ன் | த | ர | 11 வ | ல் | | | பீ | ர் |
| ர் | த் | சூ | வ | | ர் | ர | 12 கா | வி | ரி | ஷ | தூ |
| ர | ர் | த | ந் | | க | ங் | கி | ன | 13 ஜா | ண | பு |
| க | கீ | ன | தி | | ள் | 14 க | ம் | ச | ன் | ர் | ம் |
| ங் | தி | ன் | ரி | | | ம் | ல | ச | 15 கோ | | ரு |
| ச | ரு | | 16 ப | த் | ம | பா | த | ர் | | 17 சி | பெ |
| தி | 18 சு | | 19 ச | க் | க | ர | ம் | க | ரா | 20 வ | 21 ஸ்ரீ |
| 22 ஆ | ரி | யா | ம் | பா | ள் | | ம் | த | மு | 23 கு | |
| | ள் | க | பி | ம் | ந | சி | ச் | க | க் | ரு | 24 தி |

# திவ்ய ப்ரபந்தத்தின் ரஹஸ்ய வ்யாக்யானங்கள்



ஸ்ரீ உ.வே. திருநாராயணபுரம் அரையர் ஸ்ரீராம சர்மா ஸ்வாமி,
மேலுக்கோட்டை.


ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்யர் உபய வேதாந்தாசார்யர் என்று சிலாஸாஸனங்களில் எழுதப்பட்ட பிருதாவளிகள் பகவத் ராமாநுஜருக்கே முதல் முன்னமாய் ஏற்பட்டது. ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகம த்ராவிட வேதஸாகரம் தான் ஸ்ரீமத் வேதம். இதுவேதான் திவ்யப்ரபந்தங்கள். இவைதான் இருபத்து நான்காய் நாலாயிரப் பாசுரப்படியில் உள்ளவை. இவைகளை யோக ஸாக்ஷாத்காரமாய் ஆழ்வாராலே பெற்றவர் நம் நாதமுனிகள். இவர் தான் எம்பெருமானார் தர்சனத்துக்கு மூலபுருஷர்.

“நாதோபஜஞ்னம்” என்றார் வேதாந்த தேசிகரான தூப்புல் பிள்ளை. *“நாத முனி முதலாம் நம் தேசிகரையல்லால் பேதை மனமே உண்டோ பேசு”* என்றார் நம் கோயில் மணவாள மாமுனிகள். *“லோகே அவதீர்ணபரமார்த்த ஸமக்ரபக்தியோகாய நாதமுநயே”* என்றார் ஆளவந்தார். இந்த நாதனுக்கு நாலாயிரம் உரைத்தவர் நம்மாழ்வார். அவர்தாம் தம்முடைய திவ்ய ப்ரபந்தங்களில் தமக்கு எம்பெருமான் காட்டின அனுபவங்களை எல்லாம், ஒவ்வொரு ரஹஸ்யங்களாக அருளிச் செய்தார்.

அவற்றையெல்லாம் நம் நாதமுனி அநுபவித்து தர்சனார்த்தங்களை ந்யாயதத்வ க்ரந்தத்திலும், யோக ரஹஸ்யங்களை உபதேசங்களிலும் அருளிச் செய்தார். நாதமுனியின் இரு மருமக்கள் திவ்யப்ரபந்தங்களின் அனுபவ ரஹஸ்யங்களைப் பெற்று, நாதமுனி ராகம், தாளம், அபிநயனங்களைக் கொண்டு திவ்ய பிரபந்தங்களின் தம்பிரான்படி காட்டினபடி வ்யாக்யானங்களை அருளிச்செய்தார்கள். இவர்கள் தான் ஆதி காலத்தில் கோயில்கள் உண்டான போது ஆகம முறையில் அரையர்களாகத் திகழ்ந்தனர். நாதமுனிக்கு மருமக்களில் ஒருவர் கீழையகத்து ஆழ்வான் – ப்ருகு கணத்துக்குச் சேர்ந்த கோத்ரத்தார்.

மற்றொருவர் மேலையகத்தாழ்வான் – ஆங்கீரஸ கணத்துக்குச் சேர்ந்த கோத்ரத்தார். இவ்விரண்டு வம்சத்தவர்கள் இன்றளவும் ஸ்ரீரங்கம், ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவில்லிபுத்தூர், திருநாராயணபுரம் என்னும் நான்கு திவ்ய தேசங்களில் இருக்கும் அரையர்கள். அரையர்கள் அருளிச் செய்த வ்யாக்யானங்களுக்கு தம்பிரான்படி என்றும், அரையர்களுக்கு தம்பிரான்மார் என்றும் திருநாமம் வ்யவஹாரத்தில் உண்டு.

தம்பிரான்படி வ்யாக்யானங்களை அந்தந்த திவ்ய தேசத்தின் அரையர்கள் ஆங்கங்கே சேவித்து வருகிறார்கள். இவைகளில், 83 பாசுர வ்யாக்யானம் அத்யயன உத்ஸவங்களில் சேவிப்பது நடைமுறையில் உள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூரில் பல பாசுரங்களுக்கும், திருநாராயண புரத்தில் பல பாசுரங்களுக்கும் தம்பிரான்படி வ்யாக்யானம் சேவிப்பது உண்டு.



*"பகவத் கீதாஸு உபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோக சாஸ்த்ரே"* என்று பகவத் கீதையின் ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவில் சொல்லி முடிப்பார்கள். கீதா ஸமமான திருவாய் மொழி, ஆழ்வாருடைய யோக சாஸ்த்ரம் இவை இரண்டும் நாதமுனி பெற்றதில் முக்கியமானவை. இது தான் த்ரவிடோபநிஷத்து. இந்த பத்துப் பத்துக்களின் ஸாரப் பொருளையும், எம்பெருமானார் ஆழ்வாருடைய யோகாநுபவமாக கத்யத்திலும், பாஷ்யத்திலும் காட்டியுள்ளார். "ஸ்வாதீன த்ரிவித..." என்று தொடங்கி, "பவாநி" என்று ஸ்ரீரங்க கத்யத்தையும், "அநாவ்ருத்திசப்தாத்" என்கிற ப்ரஹ்மஸூத்ரத்தின் ஸ்ரீ பாஷ்யத்தையும் நன்றாக ஸேவித்தால் ஆழ்வாருடைய யோகாநுபவத்தின் 10 தசைகளை நாமும் அறியலாம்.

இவையெல்லாம் ஓலைச் சுவடிகளில் உள்ளன. கண்ணிநுண்சிறுத்தாம்புக்கு தம்பிரான்படி வ்யாக்யானம் ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக சபா மூலமாக அச்சிடப்பட்டது. இன்று நடைமுறையில் உள்ள ஈடு முதலான வ்யாக்யானங்களில் காட்டப்படாத பல விஷயங்கள் தம்பிரான்படிகளில் உள்ளன.

த்ராவிட ப்ரஹ்ம ஸம்ஹிதை என்று திருவாய் மொழியைப் பூருவர்கள் உகந்தார்கள். த்ராவிட ப்ரஹ்ம ஸூத்ரமான ஆசார்ய ஹ்ருதயத்தில் நம்பிள்ளை சிஷ்யரான நாயனார் "கீதா ஸமம் திருவாய்மொழி" என்றார். திருமாலான க்ருஷ்ணன் சொன்னது பகவத் கீதை. "திருமாலால் அருளப் பட்ட சடகோபன்" வாய் மலர்ந்தது பாகவத கீதை அல்லவா.

எம்பெருமானார்க்கு ஸாக்ஷாத் சிஷ்யராய், 74 ஸிம்மாஸனாதிபதிகளில் எழுபத்து நான்காவதாய் இருந்த திருநாராயணபுரம் அரையர் சேவிக்கும் தம்பிரான்படியில், ஆழ்வார் தாலாட்டும், 111 பாசுரங்களில் ஆழ்வாருடைய 4 திவ்ய ப்ரபந்தங்களின் ஸாரப்பொருளும், திருவாய் மொழி 100 பதிகங்களின் ஸாரப் பொருள்களும் உண்டு. திருக்கோட்டியூர் நம்பி நரசிங்கபுத்ரன் என்ற ஆசார்யர், இதனை அரையர் பாட, பட்டோலை கொண்டார் என்று ஆகர ஓலைச்சுவடியில் உள்ளது. ஆக, திருவாய்மொழிக்கு இதொரு முதல் முன்னமாக வ்யாக்யானம் அமைந்தது என்று சொல்லலாம். உதாரணமாக – *"அலர்மகளை முன்னிட்டு அவனே சரணம் என்று உலகமுண்ட பெருவாயில் ஓதீய நம்மாழ்வாரோ"* என்பது 68வது தாலாட்டு. இப்படியே விஸ்தாரமான பாசுர வ்யாக்யானங்களிலே மீமாம்ஸா ந்யாயாதி சாஸ்த்ரங்களை பக்க பலமாகக் கொண்டு வேதாந்த ஸாரப்பொருளைக் காட்டினதை "ஒரு நாயகம்" தம்பிரான்படியிலே காணலாம். உபக்ரமாதி தாத்பர்ய லிங்கங்களையும் இதில் கையாண்டுள்ளார்.

திருவாய் மொழியில் உபக்ரமத்திலே "வண்புகழ் நாரணன்" என்றும், உபஸம்ஹாரத்தில் பத்தாம் பத்தில் "திண்ணம் நாரணமே" என்றும், "திருநாரணன் தாள்" முதலான பல இடங்களிலும் அப்யாஸ ரூபமாக நாரயண சப்தங்களையே காட்டி இருக்கிறபடியாலே தீர்க்க சரணாகதியான திருவாய் மொழிக்கு விஷயம் திருநாரணனே என்று ஸித்தாந்தம்.

திருநாராயணபுரம் ஒன்றில்தான் எம்பெருமானார் திருநாமப்பாசுரங்களும், திருமஞ்சனப் பாசுரங்களும், தாலாட்டுப் பாசுரங்களும், ஸ்வாமி பரவாக் எச்சரிகை பாசுரங்களும் உண்டு. இவைகளில் ஒரு பாசுரத்தில் தம்பிரானார் ஸாதிக்கிறார்.

தொடரும்....

**ஷட்திலா ஏகாதசி**

மாசி மாத சுக்ல பக்ஷ ஏகாதசியான ஷட்திலா ஏகாதசியின் மகிமையைப் புலஸ்த்ய மகரிஷி தால்ப்ய முனிவருக்கு கூறியதை கிருஷ்ணன் தருமருக்கு கூறலுற்றான். மாசி மாதம் பிறந்ததும், புலனடக்கம் கடைபிடித்து, நன்னீராடி, காமம், கோபம், அபிமானம், பொறாமை, லோபம், கோள் சொல்லுதல் முதலிய தீமைகளை விலக்கி, தேவ தேவனை நினைத்து இறைவன் முன்னர் திருக்கோலம் இட்டு, தீபமேற்றி, பழம் முதலியவற்றை நிவேதனம் செய்ய வேண்டும்.

இம்மாத சுக்லபக்ஷ ஏகாதசியில் உபவாசம் காத்து, அந்தணரை உபசரித்து உத கும்பம், குடை, மிதியடி, உடை, காராம் பசு இவற்றைத் தானம் செய்ய மேலான புண்ணியம் கிட்டும். பாத்திரத்தில் எள்ளை நிறைத்து தானம் செய்வதால் எத்தனை எள் இருக்கின்றதோ அத்தனை ஆயிரம் ஆண்டு விண்ணுலக வாசம் கிட்டும். ஆறு எள்ளினாலேயே இப்பலன்களைப் பெறச் செய்வது இந்த ஏகாதசி.

தர்மபுத்திரா! ஒரு அந்தணப் பெண்மணி நல்லொழுக்கத்துடன் வாழ்ந்து வந்தாள். அவள்அன்னதானம் தவிர ஏனைய தானங்கள் அனைத்தையும் செய்து வந்தாள். அவள் செய்த தானங்களில் நெய் தானம் மிகச் சிறப்பாகும். அன்னதானத்தின் பெருமையை அவள் அறிய வில்லை. இறைவன் காபாலி வேடத்தில் அவள் முன் தோன்றி னான். அன்னம் யாசித்தான். அவள் அன்னம் இல்லை என்று கோபித்து, ஒரு பிடி மண்ணை திருவோட்டில் போட்டாள்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு அவள் தன்னுடைய விரத மகிமை யாலும், தான பலன்களாலும் இப் பூதவுடலுடன் விண் உலகு அடைந் தாள். இறைவனுக்கு மண் தானம் செய்ததால் உயர்ந்த மாளிகை ஒன்றையும் பெற்றாள். அன்ன தானம் செய்யாததால் அவ் வீட்டில் தானியங்கள் நிறையவில்லை. இதைக்கண்டு மனம் வருந்தி, சர்வேசா! நான் செய்யும் விரதங்க ளுக்கும், தானங்களுக்கும் இதுவோ பலன், என்னை சோதிப் பது ஏன்? என்று பரமனை சரண் அடைந்தாள். உடனே அசரீரிக் குரல் கேட்டது.

பெண்ணே! நீ அன்னதானம் செய்யாததால் ஏற்பட்ட விளைவு தான் இது. நீ வீடு செல், கதவைத் தாழிட்டுக் கொள். உன் வீட்டிற்கு தேவ கன்னிகைகள் வருவர். அவர்களிடம் ஷட்திலா ஏகாதசி



# ஏகாதசி விரதம் புராண வரலாறுகளுடன்...

*– திரு.துளசி கிருஷ்ணா, சென்னை.*

யின் வரலாற்றினையும், பெருமையையும் கூறினால் ஒழிய கதவைத் திறக்க மாட்டேன் எனக் கூறு என்றது. அவளும் அவ்வாறே செய்தாள். தேவ கன்னியர்கள் "புண்ணியவதி! உன்னைப் பார்க்க வந்துள்ளோம். கதவைத் திறப்பாயாக" என்று கூறினார்கள். இவள் ஷட்திலாவின் பெருமையைக் கூறினாலொழிய கதவைத் திறக்கமாட்டேன் என்று கூறினாள்.

அவர்களில் ஒருத்தி இந்த ஷட்திலை ஏகாதசி யின் மகிமையைக் கூறினாள். கதவு திறக்கப்பட்டது. அவளும், நாககந்தர்வ அப்ஸர மாதர்களைக் காட்டிலும் அழகு பெற்றாள். வீடும் தனம், தான்யங் களால் நிறைந்தது. அவளும் "ஷட்திலா" உபவாசம் இருந்தாள். அவர்களை நன்கு பூஜித்து அனுப்பி னாள். கேட்டதனால் அவள் பெற்ற பலனைக் கூறி னேன். ஆற்றினால் ஆகும் பலனை யாரே கூறவல்லர்.

**ஜயா ஏகாதசி**

மாசி மாத சுக்லபக்ஷ ஏகாதசியின் பெயர் ஜயா. பவித்ரமானது; எல்லா பாவங்களையும் போக்க வல்லது. பைசாசத் தன்மையையும், பிரேதத்துவத் தையும் போக்கவல்லது; தர்ம நந்தனா! முயற்சி செய்தாவது இதை அநுட்டிப்பாயாக, நான்முகனுக்கு இந்த ஏகாதசியை அநுட்டித்து பயன் பெற்ற வரலாறு ஒன்றினை முன்னம் ஒரு சமயம் கூறினேன். அதை உனக்கு இப்பொழுது கூறுகிறேன் கேள் என்று கண்ணன் தர்மனுக்கு கூறினான்.

ஒரு சமயம் தேவர்கள் அமுதமுண்டு, அப்ஸரஸ் களும் ஆனந்தமாக ஆடிப்பாடி மகிழ்ந்திருந்தனர். இந்திரனும் அவர்களுடன் இருந்தான். புஷ்பதந்தன் என்ற கந்தருவன் நடனமாடி மகிழ்வித்துக் கொண்டு இருந்தான். அவ்வமயம் கந்தர்வ ராஜன் சித்திர சேனனின் மகள் புஷ்பதந்தியும், புஷ்பதந்தனின் மகன் மால்யவானும் ஆங்கிருந்தனர். புஷ்பதந்தி பேரழகி. பத்மினி ஜாதிப் பெண். அவள் அங்க வனப்புடையாள். அவள் உடம்பிலிருந்து இயற்கை நறுமணம் வீசிக் கொண்டிருந்தது. புஷ்பதந்தன் அவளுடைய அழகில் மயங்கினான். புஷ்பதந்தியும் மால்யவானும் ஒருவரை ஒருவர் காமுற்றனர். இருவர் கண்களும் சந்தித்தன. இந்நிலையில் இவர்கள் இருவரையும் இந்திரன் நடனமாடப் பணித்தான். இசை எழும்பிற்று. தாள வாத்யங்கள் முழங்கின. சிறிது நேரம் இவர்களது நாட்டியம் களைகட்டி நேர்த்தியாக இயங்கிற்று. சின்னேரத்தில் அபஸ்வரம் தட்ட ஆரம்பித்தது. மால்யவானின் இயக்கத்தில் தாளம் பிசகிற்று. நிலை இழந்திருப்பதைக் கண்டு இந்திரன் வெகுண்டான். என்னையும் அவையையும் அலட்சியம் செய்தீர்கள். நீவிர் இருவரும் பிசாசுகளாக ஆவீர். நீங்கள் பைசாக தம்பதிகளாய் பூவுலகில் திரிந்து உழலுவீராக! என்றான். உடனே அவ்விருவரும் பிசாசங்களாக மாறி இமயச் சாரலில் வீழ்ந்து உழன்று அலைந்து வந்தனர். ஒருநாள் அவர்களுக்கு கொன்று தின்ன ஒருவரும் கிடைக்க வில்லை. ஊன் கிடைக்காத நிலையில் பட்டினி இருந்தனர். அப்பொழுது அவர்களுக்கு கழிவிரக்கம் தோன்றிற்று. பகவானே! என்ன பாபம் செய்து இந் நிலைக்குத் தள்ளப்பட்டோம். இதற்கு விடிவில் லையா என்று பகல் முழுவதும் பட்டினி வாட்ட பரமனை வழிபட்டனர். இரவிலும் பசி மேலீட்டால் தூங்க முடியாது விழித்திருந்து இறைவனையே எண்ணி இரவைக் கடத்தினர்.

அன்று ஜயா ஏகாதசி. பரமனுடைய நோக்கத்தில் இவர்கள் ஜயா விரதம் அநுட்டித்தவர் ஆயினர். மறுநாள் உதயமாயிற்று. துவாதசி வந்தது. என்னுடைய சங்கல்பத்தினால் அவர்களுடைய பிசாச வடிவம் ஒழிந்தது. அவர்கள் புஷ்பதந்தியாகவும், மால்யவானாகவும் உருவம் பெற்றனர். துவாதசி பாரணை முடித்தனர். முன்பு இருந்ததை விட பன்மடங்கு அன்பை பரஸ்பரம் மாற்றிக் கொண்டனர். விமானத்திலேறி இந்திரலோகம் சென்றனர்.

இந்திரன் உங்களுடைய பிசாச வடிவம் எவ்வாறு போயிற்று என வினவினான். தம்பதிகள் தலைவா! ஜயா ஏகாதசியின் மகிமையினாலும், பகவானுடைய அருளாலும் கோரமான பிசாச வடிவம் விலகிற்று என்று கூறினர். உடனே இந்திரன் நீங்கள் பவித்ரம் ஆனீர்கள். ஏகாதசி உபவாசம் இருந்த உங்களை வணங்குகின்றேன். மனிதனே ஆயினும் ஏகாதசி விரதம் அனுட்டித்தவர்கள் நம்மால் பூஜிக்கத்தக்கவர்கள். ஆகையால் மால்யவானே, நீ உன் மனைவியுடன் எனது லோகத்திலேயே இனிது வாழ்வீர் என்று கூறினான்.

இந்த ஏகாதசி விரதத்தை அநுட்டித்தால் பிரும்மஹத்யாதி பாபங்கள் விலகும், எல்லா தானங்கள் செய்த பலனும், எல்லா யாக பலனும் கிட்டும். என் ஸ்தானமான வைகுண்டத்தையும் அடைவான். இவ்வரலாற்றைப் படிப்பவர், கேட்பவர் அக்நிஷ்டோம பலனைப் பெறுவர் என்று கண்ணன் தருமனுக்குக் கூறினான்.

*விரதம் அறிவோம்...*



# ஜனவரி 2024
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.




தொழில் துறையில் நல்ல லாபமும் விருத்தியும் உண்டு. புதிய முயற்சிகளில் வளர்ச்சி உண்டு. பெற்றோர் ஆரோக்யம் மேம்படும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். மனைவியின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. கடனுதவிகள் கிடைக்கும். யாத்திரையில் நல்ல தரிசனம் கிட்டும். மொத்தத்தில் யோகமான மாதமாக அமைகின்றது.




தொழில் துறையில் அலைச்சல் மிகும். குடும்ப ஆரோக்யத்தில் அக்கறை தேவை. புதிய முயற்சிகள் தாமதமாக வெற்றி தரும். கர்ப்பிணிப் பெண்கள் பயணத்தை தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் நல்ல மதிப் பெண்கள் பெறுவர். குடும்பத்தில் செலவினங்கள் அதிகரிக்கும். காரமான உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. பொதுவாக எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதமிது.




தொழில் துறையில் போட்டி. அலைச்சல், வேலைபளு உண்டு. வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் கிட்டும். ஜனவரி 8ஆம் தேதிக்கு பின்னர் எதிர்பார்த்த நல்ல காரியங்கள் நடக்கும். மாணவர்கள் நல்மதிப்பெண்கள் பெறுவார்கள். எதிர்பார்த்த கடனுதவி கிட்டும். வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகமுண்டு. மொத்தத்தில் இம்மாதம் நல்ல யோகமானது.




அஷ்டம சனியின் காரணத்தினால் தொழில் துறையில் காரியங்கள் தாமதமாகும். தோல்விக்கு பின்னரே வெற்றிக்கிட்டும். மூட்டுவலி வந்து போகும். கூடுமானவரை கடன் வாங்குவதை தவிர்க்கவும். ஊழியர் களுக்கு வேலைபளு அதிகமாகும். குடும்பத்தில் விவாதங்கள் தவிர்ப்பது நல்லது. முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டு முன்னேறும் மாதம் இது.




குடும்பத்தில் விரைவில் சுப காரியங்கள் நடக்கும். வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. சொத்துக்கள் கிடைக்கும். தொழில் துறையில் இருந்த தடைகள் விலகும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரி களின் நன்மதிப்பு கிடைக்கும். வளர்ச்சி காரணமாகத் திருஷ்டி உண்டாகும். கணவன்-மனைவி நல்லுறவு உண்டாகும். பல பிரச்சனைகளுக்குத் தீர்வு கிட்டும் மாதமிது.




உடல் உஷ்ணம் காரணமாகவும், அஜீரணம் காரணமாகவும் வயிற்றில் கோளாறுகள் ஏற்படும். பணவிரயத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை. கடன் வாங்குவதையும் கடன் கொடுப்பதையும் தவிர்ப்பது நலம். மாணவர்கள் கருத்துடன் படித்தால் மதிப்பெண்கள் பெற இயலும். நண்பர்கள், உறவினர்களுடன் பேசும்போது விவாதங்களைத் தவிர்க்கவும்.




தெய்வ அருளுடன் புதிய முயற்சிகள் வெற்றி பெறும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். தொழில் துறையில் பழைய பாக்கிகள் வசூலாகும். குழப்பங்கள் தீரும். குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்களில் இருந்த வில்லங்கம் தீரும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். எடுத்த காரியத்தில் உறுதியாக வெற்றி பெறும் மாதமிது.




குடும்பத்தில் குழப்பங்கள் தீரும். கடன் வாங்கி வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. நண் பர்கள், உறவினர்கள் உதவுவர். ஆரோக்யத் திற்கேற்ற மருத்துவம் கிட்டும். குழந்தைகளின் ஆரோக் கியத்தில் சிறு குறைபாடுகள் ஏற்பட்டு சரியாகும். ஜாமீன் போடுவதைத் தவிர்க்கவும். மாணவர்கள் எதிர்பார்த்த மதிப்பெண் பெறுவர். முயற்சியால் வெற்றி தரும் மாதமிது.




தொழில் துறையில் இருந்த செலவினங்கள் குறைந்து ஓரளவு நல்ல வளர்ச்சி தர ஆரம்பிக் கும். சகோதர-சகோதரிகளின் ஆதரவு முழுமை யாகக் கிட்டும். குடும்பத்தில் விரைவில் சுபகாரியங்கள் நடக்கும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். மாணவர்கள் நல்மதிப்பெண்கள் பெறுவர். தெய்வ அருளுடன் புதிய முயற்சிகள் வெற்றி தரும் மாதமிது.




செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் உண்டு. நண்பர்கள், உறவினர்கள் உதவுவர். குழந்தைக ளுக்கு ஆரோக்யச் செலவு ஏற்படும். தனவரவு உண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். பழைய பாக்கிகள் வசூலாகும். மாணவர்கள் நல்ல மதிப் பெண்கள் பெறுவர். பலவிதத்திலும் வெற்றி தரும் மாதமிது.




பிடிவாதமாகக் காரியங்கள் செய்து வெற்றி பெறுவீர். தொழில் துறையில் புது முயற்சியில் வெற்றி கிட்டும். மனைவி-குழந்தையால் தனலாபம் உண்டு. சிறு அளவில் உடல் பலவீனமடைந்து பின் சரி ஆகும். மாணவர்கள் நல்மதிப்பெண்கள் பெறுவர். இளைய மூத்த சகோதரர்கள் பேராதரவு கிட்டும். மொத்தத்தில் சகல துறைகளிலும் வெற்றி தரும் மாதமிது.




குடும்பத்தில் விரைவில் சுபகாரியங்கள் நடக்கும். வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. தாய்-தந்தையரின் ஆரோக்யத்தில் இருந்த குறைபாடுகள் விலகும். உடல் வலி காரணமாக சிறு அளவில் ஆரோக்யக் குறைவுகள் உண்டாகும். வருமானத்திற்கேற்ப சுபச் செலவுகள் உண்டு. தொழில் துறையில் புதிய முயற்சிகள் வெற்றி தரும். தெய்வ அருளி னால் பலவிதத்திலும் வெற்றி தரும் மாதமிது.



## நீதிக்கதை

# ம(ர)க்கள் சேவையே மாதவன் சேவை

- திருமதி எஸ். வைஷ்ணவி, திருப்பதி.

ஒரு அரசன் தன் நாட்டில் இயற்கை எழில்களை பாதுகாப்பதோடு, மக்கள், அங்கு வாழும் உயிரினங்கள் என அனைத்தையும் நன்கு பாதுகாத்து, பராமரித்து வந்தான். எந்நேரமும் நாட்டு மக்கள், நாட்டின் பொதுநலன் குறித்து ஆலோசனையில் ஆழ்ந்திருப்பான். இரவும் பகலும் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வருவதே தனது பணியாகக் கொண்டான்.

ஒருநாள் காட்டு வழியில் சென்று கொண்டிருந்த அரசன் அங்கு வனதேவதையைக் கண்டான். அந்த தேவதையிடம் இந்த காட்டில் என்ன செய்துக் கொண்டு இருக்கிறீர்கள்? தங்கள் கையில் இருப்பது என்ன புத்தகம்? என வினவினான். இப்புத்தகத்தில் இறை வனை ஆராதிப்பவர் பெயர்கள் அடங்கியுள்ளது என்றாள் வனதேவதை. மிக்க ஆச்சரியத்துடன், இப்புத்தகத்தில் என் பெயர் இருக்கிறதா எனப் பாருங்கள்! எனக் கேட்டான். அத்தேவதையும் பார்த்து, அரசனின் பெயர் அந்த புத்தகத்தில் இல்லாததைக் கண்டு வருத்தமுற்றாள். அதற்கு அரசன் தாங்கள் வருந்த வேண்டாம். என் பெயர் இருக்காது. ஏனெனில் எனக்கு தெய்வ ஆராதனைக்கும், புண்ணிய யாத்திரை செய்வதற்கும், ஸ்வாமி நாம ஸ்மரணை செய்வதற்கும் நேரம் கிடைப்பது இல்லை. அதனால் என் பெயர் அதில் இருக்க வாய்ப்பில்லை. நீங்கள் வருந்த வேண்டாம் எனக் கூறிச் சென்று விட்டான்.

சில காலம் கழிந்தது. மற்றொரு நாள் அதே வனதேவதையை அரசன் கண்டான். இம்முறை சிறிய புத்தகத்தை கையிலேந்திக் கொண்டு நின்றிருப்பதைக் கண்டான். அரசன் அந்த வன தேவதையிடம் என்ன இந்த முறை சிறிய புத்தகத்தை கையில் ஏந்திக் கொண்டு நின்றிருக்கிறீர்கள்? என வினவினான். அதற்கு வனதேவதை கடவுளுக்கு பிரியமானவர் களின் பெயர்கள் அடங்கிய புத்தகம் இது என்றாள்.

இப்புத்தகத்தில் கடவுளின் பெயரைக் கூட உச்சரிக்காத என் பெயர் இடம் பெற வாய்ப்பே இல்லை. ஆனாலும், என் நாட்டு மக்கள் யார் பெயராவது வந்திருக்கிறதா எனப் பாருங்கள் என்றான். அதற்கு சரி என்று கூறி, வனதேவதையும் பார்க்கத் துவங்கினாள். ஆச்சரியத்துடன் வன தேவதை அரசனைப் பார்த்து, உங்கள் பெயர் முதல் பக்கத்தில் முதல் பெயராக உள்ளது எனக் கூறினாள்.

அரசன் என் பெயர் உள்ளதா? எனக்கு கடவுளின் நாமம் உச்சரிக்கக் கூட நேரமில்லை. யாத்திரைக்கும் போனதில்லை. என் பெயர் எப்படி என்றுக் கேட்டான். அதற்கு அத்தேவதை, தாங்கள் கடவுள் நாமம் உச்சரிக்காமல், யாத்திரைக்கு செல்லாமல் இருந்தாலும் எந்நேரமும் கடவுள் படைத்த உயிரினங்கள், இயற்கை எழில் மேம்பாடு, நாட்டு மக்கள் எனப் பிற நலனில் அக்கறையோடு சுயநலம் இல்லாமல், செய்யும் வேலையே கடவுள் என்று வாழ்ந்து வந்த உன்னை தனக்கு விருப்பமானபடி இறைவன் முன்னிலையில் வைத்திருக்கிறார் என்பதை அறியுங்கள் என்றாள் வனதேவதை.

நீதி : கடவுள் நாமம் உச்சரிப்பது, யாத்திரைகள் செய்வது என்று மட்டும் இல்லாமல், சுயநலமில்லாத உணர்வுடன் இறைவன் படைத்த அனைத்திற்கும் உதவிட வேண்டும்.

# पाठ :त्रिंशः ஸம்ஸ்க்ருதம் அறிவோம் பாடம்-30

| | | | | | |
|---|---|---|---|---|---|
| मया | = என்னோடு | द्रक्ष्यति | =பார்க்கக்கடவன் | पश्यति | = பார்த்துக் கொண்டிருக்கிறான் |
| अस्माभिः | = எங்களோடு | इतः परम् | =இனிமேல் | इतः पूर्वम् | = இதுவரை, இதற்கு முன்பு |
| त्वया | = உன்னோடு | इति | =என்று | दर्शयति | = பார்க்கும்படிச் செய்கிறான் |

## வினாக்கள்

1. यूयं मया आगच्छत।
2. वृक्षे फलानि न सन्ति।
3. सर्वाणि फलानि अपतन्।
4. तत्र गोविन्दः अस्ति किं वा? पश्य।
5. मम मञ्चं दर्शय।
6. तव जनकः श्वः अस्माभिः आगमिष्यति।
7. पाकः कथमस्ति न द्रक्ष्यसि किम्?
8. झटिति पाकं कुरुत। इति वद।
9. एतत् क्षीरं पातुं सम्यक् नास्ति।
10. एतत्क्षीरे लवणम् अपतत्।

1. இந்தப் பையனின் வீட்டை எனக்கு காண்பி.
2. அவன் உங்கள் வீட்டிற்கு எதற்குப் போனான்?
3. சிறிது தூரம் போவாயாக.
4. நேற்று கட்டிலை உங்கள் வீட்டில் நான் பார்த்தேன்.
5. அப்படியானால் எங்களோடு வருவாயா?
6. நான் வந்தபோது இங்கு எங்கள் வீட்டை யார் பார்த்தார்கள்?
7. உங்கள் தம்பி வீட்டில் இருக்கிறார் அல்லவா!
8. அவர்கள் மலையில் நடந்துக் கொண்டு இருக்கிறார்கள்!
9. நீ அங்கு எதற்கு நடந்து கொண்டிருக்கிறாய்?
10. வெறுமனே.

## விடைகள்

1. நீங்கள் என்னோடு வாருங்கள்.
2. மரத்தில் பழங்கள் இல்லை.
3. எல்லாப் பழங்களும் விழுந்தன.
4. அங்கு கோவிந்தன் இருக்கிறானா என்ன பார்?
5. என்னுடைய கட்டிலை காண்பி.
6. உன்னுடைய தந்தை நாளை எங்களோடு வருவார்.
7. சமையல் எப்படி இருக்கிறதோ பார்க்க மாட்டாயா என்ன?
8. உடனே சமையலைச் செய்யுங்கள் என்று சொல்.
9. இந்தப் பால் பருகுவதற்கு நன்றாக இல்லை.
10. இந்தப் பாலில் உப்பு விழுந்தது.

1. एतस्य बालकस्य गृहं मम दर्शय।
2. सः तव गृहं किमर्थं गतवान्। (अगच्छत्)
3. किञ्चित् दूरं गच्छ।
4. ह्यः अस्माकं मञ्चं युष्माकं गृहे अहं अपश्यम्।
5. तर्हि अस्माभिः आगच्छसि किम्?
6. अहम् आगच्छामि चेत् अत्र मम गृहं के पश्यन्ति?
7. तव अनुजाः गृहे सन्ति खलु।
8. ते पर्वतेषु चलन्ति।
9. त्वं तत्र किमर्थं चलसि?
10. तूष्णीमेव।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி,
தொகுப்பு : திரு.கே. சூர்ய நாராயணா, தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

பல் சுவை பகுதி

சித்திரப் பகுதி

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



படத்தைப் பாருங்கள் !



வண்ணம் தீட்டுங்கள் !!



வண்ண வண்ண மாக்கோலங்களுடன், பூசணி பூக்களுடன், ஹரிதாசர்களின் பாட்டுகளுடன், கரும்பு, பொங்கல் வைத்து ஆநிரைகளுடன் இயற்கையைக் கொண்டாடும் பண்டிகை

..............



எந்த பொருள் எந்த தெய்வத்திற்குத் தொடர்புடையது என்று பொருத்துங்கள் !

ஓமஓஇ ஒ 'ஙுஒஇ – ட்பஎமிமமஓ
hஙுமமூ – ப்பபரிஓ
ஒரிஓயுபமஒh – ப்மைர்ஒமிஓஓ

## வார்த்தைகளைச் சரியாக எழுதி ஆத்திசூடியைப் படிப்போமா!

வளை ஙப் போல், கண்டு சொல்லேல் ஒன்று

மஔஒ ஒபாஒ ஙுய 'ஒஒஒஒபஓஒ யிஒஒ ஒஒஓ



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 0 | 3 | 2 | 9 | 5 |
| | | → | 1 | 2 | 3 | 4 |
| 8 | 9 | 5 | 4 | 3 | 7 | 8 |
| 7 | 10 | 11 | 8 | 4 | 5 | 9 |
| 12 | 14 | 13 | 12 | 9 | 6 | 16 |
| 6 | 4 | 10 | 9 | 8 | 7 | 15 |
| 16 | 15 | 11 | 12 | 13 | 14 | 10 |
| 15 | 13 | 12 | 18 | 15 | | |
| 15 | 14 | 15 | 16 | → | | |



பாதையைக் கண்டுபிடி

திருமாலைப் போற்றி திருப்பாவை, நாச்சியார் திருமொழி அருளிய கோதா தேவியின் திருக்கரத்தை சென்றடைய இந்த கிளிக்கு 1 முதல் 16 வரை உள்ள எண்களை இணைத்து பாதையைக் காட்டிடுங்கள்.



மாநிலத்தைக் கண்டுபிடி

சோமநாதர் ஆலயம், சபர்மதி ஆஸ்ரமம், மஹாத்மா காந்தி பிறந்த இடம் அமைந்துள்ள மாநிலம்...

ஓ.ப.ரிஜஓ

வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-18

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. மாசி மாதம் வருகின்ற ஏகாதசியின் பெயர்கள் ..........
2. கூர்வேல் கொடுத்தொழிலன் என்று ஆண்டாள் யாரைக் குறிப்பிடுகிறார் ..........
3. புலன்களை காவலில் வைக்கும்படி கூறும் ஆழ்வார் ..........
4. தமிழர் திருநாளான பொங்கல் கொண்டாடப்படும் தமிழ் மாதம் ..........
5. ஜல்லிக்கட்டிற்குப் புகழ் பெற்ற இடம் ..........
6. அஞ்சனை மைந்தனான அனுமன் பிறந்த நட்சத்திரம் ..........
7. ஐய்யங்கார் குளத்தில் அமைந்திருக்கும் அனுமன் ஆலயத்தின் பெயர் ..........
8. தமிழ்நாட்டில் கல் நாதஸ்வரம் இருக்கும் ஆலயம் ..........
9. ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும் என்று கூறியவர் ..........
10. ஆநிரைகளுக்காகக் கொண்டாடப்படும் பண்டிகை ..........
11. திருக்கச்சி நம்பிகள் அவதரித்த மாதம், நட்சத்திரம் ..........
12. நாதமுனிகளுக்கு நாலாயிரம் உரைத்தவர் ..........
13. காஞ்சி பேரருளாளனுக்கு திருவாலவட்ட கைங்கர்யம் செய்தவர் ..........
14. தை மாதம், மகம் நட்சத்திரத்தில் அவதரித்த ஆழ்வார் ..........
15. தொண்டரடிப்பொடியாழ்வார் அவதரித்த மாதம், நட்சத்திரம் ..........

## போட்டிக்கான நிபந்தனைகள்




- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.01.2024.

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

## சக்கரத்தை சுற்றுங்கள்!
## அதே வண்ணக்கட்டத்தில் எழுதுங்கள்!!










### விடைகள்

1) பொங்கல் பண்டிகை, 2) போகிப்பண்டிகை, 3) பொங்கல் பண்டிகை, 4) ஜல்லிக்கட்டு,
5) மாட்டுப்பொங்கல், 6) மகர சங்கராந்தி, 7) பொங்கல் பண்டிகை, 8) தை மாதம் முதல் நாள்.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்



1) பட்டம் 2) பறவை, 3) ஹரிதாசர் தலைமேல் பானை, 4)பெண்ணின் கையில் தட்டு, 5) சிறுமி,
6) மலர்ச்செடி, 7) தென்னை மரம்.

# பொங்கல் பண்டிகை மரபு (ஆந்திர மாநிலம்)

சித்திரக் கதை

கதை மூலம் :திரு. டி. ஸ்ரீநிவாச தீக்ஷிதலு
சித்திரம் :திரு. கே. துளசிபிரசாத்





தோழிகளே! ஸ்ரீலக்ஷ்மி தாயார், கௌரி தேவி, கிருஷ்ணனை வைத்து துதித்தனர். தூபம், தீபம், நைவேத்தியம், ஆரத்தி சமர்ப்பித்தனர்.
பழத்தையும், வெல்லத்தையும் நைவேத்தியமாகப் படைப்போம்.
நைவேத்தியம் படைத்தப் பின்னர், அங்கு கூடியிருந்த கன்னிப் பெண்கள் இரு கைகளையும் தட்டியபடி, கும்மியடித்து அலங்கரிக்கப்பட்ட பசுஞ்சாண உருண்டைகளைச் சுற்றி வந்து பாடல்களைப் பாடினர். இவ்வாறு செய்வதினால் செல்வமும், சௌபாக்கியமும், ஆரோக்கியமும் பெருகிடும் என்பது நம்பிக்கை ஆகும்.
கும்மி அடி பெண்ணே கும்மியடி!
யதுகுல ஸ்வாமிக்கு கும்மியடி!!
பசுஞ்சாண உருண்டைகளை கவனமுடன் கோலத்தினுள் வைப்போம் வாருங்கள்.
கும்மி பாட்டு பாடியபடி பசுஞ்சாண உருண்டைகளை வரட்டியாக செய்வதற்கு சுவற்றிலே தட்டி வைப்போம்.
மாதம் முழுவதும் காய்ந்த அந்த வரட்டியை அடுப்பில் இட்டு, பொங்கலிட்டு, சூரியனுக்குப்படைத்தனர்.
பொங்கலோ பொங்கல்!
இவ்வாறு சம்பிரதாயப்படி பூஜிப்பதால் அனைத்து நற்பலனும் கிட்டும் என்பது முன்னோர்கள் வாக்கு.
முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம்
☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஒ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**
பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



19-11-2023 அன்று திருமலையப்ப ஸ்வாமிக்கு நடைபெற்ற புஷ்ப யாக மஹோத்ஸவம்



19-11-2023 அன்று திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு நடைபெற்ற புஷ்ப யாக மஹோத்ஸவம்



24-11-2023 அன்று திருமலையில் கைசிக துவாதசி முன்னிட்டு நடைபெற்ற ஸ்ரீஉக்ரஸ்ரீநிவாச மூர்த்தி திருமாடவீதி உத்ஸவத்தில் பங்கு கொண்ட ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய, சின்ன ஜீயர் ஸ்வாமிகள், தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர், தி.தி.தே. செயலாட்சித் தலைவர்



26-11-2023 அன்று திருவேங்கடமுடையான் ஆலயத்தில் நடைபெற்ற கார்த்திகை தீப உத்ஸவத்தில் பங்கு கொண்ட ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் ஸ்வாமிகள், தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள்




26-11-2023 அன்று திருவேங்கடமுடையானை தரிசிக்க திருப்பதிக்கு வந்திருந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களை வரவேற்ற மேதகு ஆளுநர் திரு.எஸ். அப்துல் நஜிர் அவர்கள், மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு.ஒய்.எஸ்.ஜகன்மோகன் ரெட்டி அவர்கள். மறுநாள் அதிகாலை ஸ்வாமியைத் தரிசித்த பிரதமர் அவர்களுக்கு ஸ்வாமி பிரசாதங்களை வழங்கிய தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.பூமண கருணாகர ரெட்டி அவர்கள், அருகில் தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள்

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-12-2023 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.



கோதை அலங்காரத்தில்
கோவிந்தன்